www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.5 திருவள்ளுவர் ஆண்டு 2051 | 14.09.2019 - 13.10.2019 | ISSN : 2195-6480




## பாலுக்குக் காவலாய் பூனைகள் கூட்டத்தையா வைப்பது?

FREE Magazine

தீபாவளி நல்வாழ்த்துகள்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்கு யாருக்கு?

## மூவரில் யாரோ?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA


TKS
BESTFOODS
Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883
TKS
BEST FOODS
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இதயங்கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துகள்
உங்களின் அன்றாட தேவைகளுக்கும்
உங்களின் வேண்டுகோளுக்குமிணங்க
தரம் என்ற தாரக மந்திரத்துடன்
நியாயமான விலைகளுடன்
பலசரக்குப்பொருட்கள்
மரக்கறி வகைகள் மற்றும்
மீன் வகைகள் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்.
www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de
வாடிக்கையாளர்
அனைவருக்கும்
Happy
Diwali
தீபாவளி நல்வாழ்த்துகள்

TREUE + BONUS[2)]

ortel MOBILE



WORLD FLAT

+ **Unbegrenzte Minuten in 47 Länder**

+ **Deutschland Flat**

+ **Treuebonus: Ab dem zweiten Monat nur 19,99 €/28 Tage**

**24 99 €[1)] /28 Tage**

# OHNE PAUSE NACH HAUSE.



*nur Festnetz

**Ortel. Wir sprechen Deine Sprache.**

Google play – Available on the App Store

**Aufladbar mit:** ortel MOBILE, O2, e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.

AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14.புரட்டாசி 2019 13 - ஐப்பசி 2019
சுவடி / ISSUE 8.5

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்னை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**
**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**
**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**அன்பு நிறைந்த வணக்கம்.**




நாடு உலக நாடுகளின் வரமாய் தந்த மைத்திரி - ரணில் இணைந்த நல்லாட்சி, ஆட்சிக் கட்டிலில் உள்ளவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சகல நலங்களையும் அள்ளிக் கொடுத்து விட்டு விடைபெறும் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறது. எப்போ போகும்? என ஏங்கும் அளவுக்கு அது பொது மக்களுக்கும், இருக்கும் வரை பதவியில் இருந்து விட்டுப் போவோம் எனப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் நல்லாட்சி இருந்து விட்டுப் போகிறது.

ஆனால், ஆசை யாரைத்தான் விட்டு வைக்கிறது. வரும் பொழுது நல்லாட்சி தர வருகிறேன். தந்து விட்டு நானாகவே போய்விடுவேன் என்று சொல்லிப் பதவிக்கு வந்த மைத்திரி, இப்போ 2வது ஆட்டத்துக்கு ஆலாய்ப் பறக்கிறார். பிரதமராக வந்த ரணில், அடுத்த நல்லாட்சி தர அதிபர் போட்டி போட அடம் பிடிக்கிறார். வெள்ளைவான் வீரர் கோட்டபாயா, வெள்ளை வான அரசியல் தருவதற்காய் போட்டியில் குதிக்கிறார்.

அவரை வெல்ல வைக்க அமெரிக்க அரசு வரிந்து கட்டி நிற்கிறது. அதற்கு போட்ட அச்சாரம்தான் உயிர்த்த ஞாயிறு தினத்தில் தமிழர் மீதான குண்டுத் தாக்குதல். அதன் விசாரணைத் தொடருகிறது. பாராளுமன்ற விசாரணைக் குழுவின் விசாரணையில் மைத்திரி சாட்சியம் அளிக்கிறார்.

மக்கள் சக்திக் கட்சி என்கிற கூட்டுக் கட்சி சார்பாக மக்கள் விடுதலை முன்னணியின் அநுர திசாநாயக்க மிகப் பெரும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் அதிபர் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். சஜித் பிரேமதாசா எனப் பலர் குதிக்கிறார்கள். அதனால் தமிழ் முஸ்லிம் வாக்குகளைப் பெற்றுவிடப் பலத்த போட்டி. தமிழ் தேசியக் கூட்டணி ரணிலை விடவும் முடியாமல், யாரையும் தொடவும் முடியாமல் தவிக்கிறது. தமிழ் மக்களுக்கு இதுவும் தேவையா சம்பந்தர், சுமந்திரன் எந்தக் குட்டிச் சுவரோடு ஒதுங்குவது? எனத் தெரியாத நிலையில் உள்ளனர்.

தமிழர் பகுதிகளில் 'எழுக தமிழர் 2019' ஒரு பேரலை வீசி ஓய்ந்திருக்கிறது. அதனைக் காணச் சகிக்காத கூட்டம், கரிச்சுக் கொட்டுகிறது. தமிழருக்கே உரித்தான இந்த உன்னத குணம், எந்தவிதக் குறையும் இல்லாமல் இன்னமும் அப்படியேதான். எத்தனை பேரழிவுகளைக் கண்டாலும், தமிழ் இனத்தின் இப்பெருங் குணத்தில் மாற்றம் என்பதே வராது என்கிற வரலாற்று உண்மை, இன்னமும் வலுவாக இருப்பதையே காண முடிகிறது.

மீண்டும் வரும் ஆவலுடன்.

**ஆசிரியர், அகரம் குழுமம்**







# பாலுக்குக் காவலாய் பூனைகள் கூட்டத்தையா வைப்பது?

ஓய்வு பெற்ற நீதிஅரசரும், முன்னாள் வடமாகாண முதலமைச்சருமான திரு.விக்கினேஸ்வரன் ஐயா மீது, ஈழத் தமிழ் மக்களைப் போன்றே புலம் பெயர் தமிழ் மக்களும், அகரம் குழுமமும் அளவற்ற நம்பிக்கை வைத்துள்ளது. ஆனால், அவர் மீது காலம் சுமத்தி உள்ள வரலாற்றுக் கடமையோ, எந்த ஒரு தனி நபராலும் திறம்பட செய்து முடிக்க இயலாத உள்நாட்டு, வெளிநாட்டு அரசுகளின் தேவைகளையும் கவனத்தில் கொண்டு, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்புடையத் தீர்வை வென்றெடுக்க வேண்டிய ஒன்றாகும்.

**எல்லாரும் ஏறி விழுந்த குதிரையில் இவரை ஏற்றிவிட்டு, மற்றவர்கள் தப்பித்துக் கொண்டு விட்டனர். ஆனால், அவரைத் தவிர மற்ற எல்லாருமே பழைய சண்டியும், நொண்டியுமான குதிரைகள் தான். எனவே எந்தக் குதிரைகள் சண்டி செய்து, தமிழ் மக்களைப் படு குழியில் தள்ளினவோ, அதே குதிரைகளை வைத்து நீதி அரசரால் எப்படி நம்பிப் பயணிக்க முடியும்?**

அதே பாராளுமன்ற அரசியல், அதே ஓடித் தோற்ற அல்லது குறுக்கே ஓடிய குதிரைகளை வைத்து, பந்தயம் ஓட முற்படும் நீதி அரசரை கொஞ்சம் நிதானித்து செயற்படக் கேட்கும் உரிமையால் அகரம் இக்கட்டுரை மூலம் பணிவாகக் கேட்டுக் கொள்கிறது.

முதலில் அரசியல் கட்சித் தலைவர்கள் யாரையும் இணைத்துத் தேர்தல் அரசியலைச் செய்யாதீர்கள்.

த. எதிர்மன்னசிங்கம்



கட்சிகள், குழுக்கள், அமைப்புகள் முதலியவற்றின் தலைவர்கள் அனைவரும் தமது முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி, ஒருவரோடு ஒருவர் தம்மில் யார் பெரியவர், வல்லவர், நல்லவர் என்கிற சண்டைகளால் எவரும், எதையும் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி விடுவர். கடந்த 72வருட கால அரசியலில் எமது தலைவர்கள் அதையேதான் சாதித்துக் காட்டினர். அதன் பலனைத்தான் தமிழ் இனம் இன்று அனுபவிக்கிறது.

**இவர்கள் யோக்கிமான அரசியலைச் செய்திருந்தால் தமிழினம் இந்தத் தோல்வியை சந்திக்கும் நிலை வந்திருக்காது. எனவே, இவர்களில் எவரையும் சேர்த்து புதிய கட்சியை தொடங்காதீர்கள். மொத்தத்தில் இனி எமக்குப் பாராளுமன்ற அரசியலே பயன்தரமாட்டாது. எனவே, பழைய அரசியல் தலைமைகள் எவரையும் உங்கள் அமைப்பின் தலைமை இடங்களில் வைக்காமல், முற்றிலும் புதியவர்கள், நல்ல கல்வி அறியும், அரசியல் ஞானமும் கொண்ட நேர்மையான, ஒழுக்கம் நிறைந்த நபர்களை இணைத்து அரசியலைச் செய்யுங்கள்.**

பழைய கட்சிகள் எவற்றிலும் வெளிப்படைத் தன்மையோ, ஜனநாயக நெறி முறைகளோ ஆண்டுப் பொதுக் கூட்டங்களைக் கூட கிராமமாக நடத்தாத நிலைமைகளைக் கண்டோம். அப்படியான குறைபாடுகள் இல்லாத அமைப்பாக உங்கள் அமைப்பு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.



மேலும் மக்களின் பிரச்சினைகளில் தமிழ்ப் பெண்கள் மிகவும் ஆர்வமாகவும், துணிச்சலாகவும் போராடி வருவதைக் காண்கிறோம். எனவே உங்கள் அமைப்பின் தலைமையில் சரி பாதிக்குக் குறையாத பெண்களின் எண்ணிக்கை இருக்க வேண்டும் என்பதையும் தங்களின் கவனத்தில் கொண்டுவர விரும்புகிறோம்.

# V one DISTRIBUTION




**Rheinische Str. 70 44137 Dortmund**

T 0231 330 16 114 ✉ V-ONE@outlook.de

Handy Verträge ab 1,- €
Handy Zubehör
Handys
Handy Reparatur
Festnetz DSL
Prepaid SIM
Prepaid Guthaben

KFZ Gutachten
Passbilder
Event Fotos& Videos

Privat Kredit

Handy Versicherung
KFZ Versicherung
Haftplicht Versicherung
und vieles mehr...

vodafone
YUPPTV
ay yıldız
dpd Pickup
FLiXBUS
Lyca mobile Call the world for less
Lyca TV
WESTERN UNION WU moving money for better
MoneyGram
unitymedia
KFZ-SACHVERSTÄNDIGER AMBERG
1&1
BLACK DIAMOND
ortel MOBILE
Ria Money Transfer
LEBARA
yourfone
T··Mobile·
O2
otelo

நேர்காணல் : இரவி

# அன்று தேசியத்தலைவர் உருவாக்கிய கூட்டமைப்பு அல்ல இது

திரு.கஜேந்திரகுமார்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணித் தலைவர் திரு. கஜேந்திரகுமார் அவர்களிடம் அகரம் இதழின் ஊடகவியலாளர் நடாத்திய நேர்காணல்.

சென்ற மாத தொடர்ச்சி....

**முதலமைச்சார் விக்னேஸ்வரன் தலைமையிலான மாற்று அணியில் சுரேஸ் பிரேமச்சந்திரன் இல்லாவிட்டால் நீங்கள் இணைந்து செயற்படத் தயார் என்று கூறுகின்றீர்கள். அதே நேரம் முதலமைச்சர்; விக்னேஸ்வரன் சுரேஸ் பிரேமச் சந்திரனையும் உங்களையும் இணைத்துக் கொண்டு செல்ல விரும்புவதாக கூறுகின்றார். ஆயினும் அதனை நீங்கள் மறுக்கின்ற நிலையில் இந்த மூன்று தரப்பினரும் தொடர்ந்தும் இணைய சாத்தியங்கள் இருக்கின்றனவா?**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நீதியரசர் விக்னேஸ்வரனும் ஒன்று சேர்வதைத்தான் மக்கள் விரும்புகின்றனர். ஆனால் விக்னேஸ்வரன் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு துரோகமளிக்கிற நிபந்தனையை அதாவது தமிழ்த் தேச விரோத நிபந்தனை அதாவது காட்டிக் கொடுக்கிற இன்றைக்கும் பிழையாக கொள்கையில்லாமல் சுயநலத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பையும் இணைத்துக் கூட்டுச் சேர்ப்பது என்ற தேவையில்லாத நிபந்தனையை வற்புறுத்தும் நிலைப்பாட்டை எடுக்கின்றார். இதுதான் உண்மை.



**தமிழீழ விடுதலைப் புலிகள் பல கட்சிகளையும் இணைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியிருந்தனர். அதே போல காலத்தின் தேவை கருத்தி சில விட்டுக் கொடுப்புகளுடன் முரண்பாடுகளை மறந்து சேர்ந்து செயற்பட வேண்டியது அவசியமென விக்னேஸ்வரன் கூறியிருக்கின்றாரோ?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல். எப் அணிக்கும் மன்னிப்பு கொடுத்து தேசியத் தலைவர் சேர்த்தார் என்ற காரணத்தையும் சொல்கிறார். அதனால் நாங்களும் சேர்க்க வேண்டுமென்று சொல்கின்றார். அப்ப தலைவர் பிரபாகரன் சேர்க்கலாம் என்றால் நாங்கள் சேர்க்கக் கூடாதென்று கூறுவதில் நியாயம் இல்லை என்ற அடிப்படையில் தான் அந்த கருத்தைச் சொல்லப் பார்க்கின்றார். தலைவர் பிரபாகரன் சொல்கிற எல்லாத்தையும் நாங்கள் செய்யப் போகின்றோம் என்றால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு ஏன் விலகினீர்கள்.

தலைவர் பிரபாகரன் தான் கூட்டமைப்பை உருவாக்கினவர். அப்ப ஏன் கூட்டமைப்பு பிழை என்று வெளியே வந்தீர்கள்? புதுக்கட்சி உருவாக்கினீர்கள்? தலைவர் பிரபாகரன் உருவாக்கிய கூட்டமைப்பு பிழை என்று சொல்லிவிட்ட நீங்கள் வெளியில் வருவது தலைவர் பிரபாகரனுக்கு துரோகமில்லையோ.? தலைவர் பிரபாகரன் மன்னிப்பு கொடுத்து ஒரு வாய்ப்பைக் கொடுக்கிற என்று சொல்லி கொடுத்த கூட்டுச் சேர்ந்துவிட்டு அதே தலைவர் பிரபாகரனைக் காட்டிக் கொடுத்த இந்தப் போராட்டத்தை அழித்ததற்கு பங்காற்றிய ஈ.பி. ஆர்.எல்.எப் அமைப்பை நாங்கள் பிழை என்று சொன்னது தான் அவருக்கு பிழை என்று படுகிறதோ.?

எந்தக் காரணத்திற்காகவும் நாங்கள் அன்றிலிருந்த கூட்டமைப்பை பிழை என்றும் இன்றைக்கு இருப்பது தலைவர் பிரபாகரன் உருவாக்கிய கூட்டமைப்பு அல்ல. இது ஒரு கூத்தமைப்பு என்று சொல்லி குற்றம் சாட்டினமோ அதே போல




STAR IMPEX
Lebensmittel Grosshandel e.K.



# Happy Diwali

Nila Quality Products
Double Horse
AGAM Healthy and tasty Foods அகம்
Rabeena Since 1986 We've Mastered Taste
BTM
Aachi The Mother of Good Taste

Franziusstrasse.150 (TOR 3)  DE - 44147 Dortmund
Tel : 0231/8602696  Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de

வரசித்தி மஹால்
Varasithy Mahall


**Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்**

# வரசித்தி மஹால் மண்டபம்

வாடிக்கையாளர் அனைவருக்கும்....

**தீபாவளி நல்வாழ்த்துகள்**

**சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...**





திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
| --- | --- | --- |
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch  mail : vasasithymahall@hotmail.com

ஈ.பி.ஆர்.எல்.எப் பற்றியும் இன்றைக்குச் சொல்கிறோம். அதாவது கூட்டமைப்பை குற்றஞ்சாட்டிய அதே காரணங்களுக்காகத் தான் ஈ.பி.ஆர்.எல்.எப் பிழை என்றும் சொல்கிறோம். விக்னேஸ்வரன் தனது தேர்தல் அரசியலை மட்டும் மையப் படுத்தி இந்த மக்களுக்கு துரோகம் அளிக்கிற எண்ணிக்கையில் கூட்டுச் சேர்வதற்கு முடிவெடுக்கிறது இந்த மக்களை மிகப் பிழையாக ஒரு நெருக்கடிக்குள் தள்ளுகிற ஒரு விடயமாக நிச்சயமாக அமையும் என்பதை நாங்கள் இன்றைக்கு சுட்டிக் காட்டுகிறோம்.

முன்னர் எப்படி நாங்கள் 2009 இல் இருந்த கூட்டமைப்பை சுட்டிக்காட்டினோமோ அதே போல இன்றைக்கு இந்தப் பிழையையும் சுட்டிக்காட்டுகிறோம்.

***புதிய மாற்று அணி முயற்சிகள் முற்றுப் பெறாத நிலையில் எதிர்வரும் தேர்தல்களில் அது எத்தகைய தாக்கத்தைச் செலுத்தும்?***

இந்த இணைவு சாத்தியமில்லை என்றில்லை. ஆனால் இந்த இணைவு எப்படிச் சாத்தியம் என்றால் விக்னேஸ்வரன் ஐயா ஏற்றுக் கொள்ள முடியாத தமிழ்த் தேசியத்திற்கு பாதிப்பைத் தரக்கூடிய ஈ.பி.ஆர்.எல்.எப் இல்லாமல் கூட்டு இல்லை என்ற நிபந்தனையை அகற்ற வேண்டும். அந்த நிபந்தனையை அகற்றினால் கூட்டுக்கான வாய்ப்புகள் இருக்கிறது. விக்னேஸ்வரன் ஐயா ஈ.பி.ஆர்.எல்.எப் இல்லாமல் கூட்டு இல்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்ற வரைக்கும் விக்னேஸ்வரனுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்குமான கூட்டுக்கு வாய்ப்புகள் இல்லை. நாங்கள் கூட்டுச் சேரத்தயார். ஆனால் கொள்கையில் உறுதியாக இருக்கக்கூடிய தரப்புகளோடு மட்டும் தான் கூட்டுச் சேர்வோம். ஆகையால் கொள்கையில் எந்தவிதமான சமரசத்திற்கோ விட்டுக்கொடுப்பிற்கோ இடமில்லை.

***தமிழ் மக்களின் பல பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை என்று குற்றஞ் சாட்டப்படுகின்ற நிலையிலும் தொடர்ந்தும் அரசிற்கு கூட்டமைப்பு ஆதரவை வழங்கி வருவதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?***

கூட்டமைப்பு அரசிற்கு ஆதரவு வழங்கி வருவது என்னைப் பொறுத்த வரையில் ஆச்சரியப்பட வேண்டிய விடயமல்ல. இன்றைக்கு கூட்டமைப்பு வல்லரசின் முகவர்கள். அந்த வல்லரசுகளின் நலன்கள் மட்டுமே தான்


வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்...

AS ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

**R.RAGUNATHAN**
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

**T. ANBALAGAN**
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS MONEY TRANSFER · Ria · MoneyGram · TEMPO MONEY TRANSFER

IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390

பேணப்படுகிறது. மேற்கு இந்திய நாடுகள் விசேடமாக சீன சார்பு ராஜபக்ச வரக்கூடாது என்றும் தாங்கள் விரும்பிய ரணில் விக்ரமசிங்க தரப்பை ஆட்சியில் வைத்திருக்க வேண்டுமென்ற நிலையில் இன்றைக்கு கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்கு இடமில்லை.

ஆகவே ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்று கூட்டமைப்பிற்கு கட்டளையிடப் பட்டுள்ளது. ஆகையினால் கண்ணை மூடிக் கொண்டு கூட்டமைப்பு அதனைச் செய்கிறது. இன்னுமொரு தேர்தல் வரப் போகின்ற நிலையில் தவிர்க்க முடியாமல் நாங்களும் தள்ளப்பட வெறுங்கையோடு மக்கள் மத்தியில் செல்ல முடியாது துரத்தி அடிப்பார்கள் என்பதை அரசாங்கமே உணர்ந்துள்ளதால் அரசாங்கமே கம்பரெலிய போன்ற இலஞ்சங்களை கொடுத்து கூட்டமைப்பை வெல்ல வைப்பதற்கான முயற்சிகள் நடக்கிறது.

**கொள்கையிலிருந்து விலகிப் பயணிப்பதாக கூட்டமைப்பை கடுமையாக விமர்சிக்கும் நீங்கள் அதற்கு மாற்றாக பலமான கூட்டணியொன்று அமைவதற்கான சூழமைவுகள் ஏற்பட்டுள்ள தற்போதைய சந்தர்ப்பம் உங்களின் கடுமையான நிலைப்பாட்டால் தவறவிடப்படுகின்றதல்லவா?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழினத்திற்கு துரோகமிழைக்க போகின்றது என்பதை 2010ஆம் ஆண்டு நாம் கூறிய போது யாரும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் நாம் தீர்க்க தரிசனமாக கூறிய விடயமே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோன்று தான் கூட்டமைப்பினை தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் கூட்டமைப்பினை விடவும் மோசமான



கொள்கைகளைக் கொண்டதும் கூட்டமைப்பின் தவறுகளையே செய்து கொண்டிருக்கும் தரப்புகளை ஒருங்கிணைத்துக் கொண்டு உருவாகும் கூட்டுக் கொள்கை பற்றுறுதியான அணியை உருவாக்கப்போவதில்லை.

அத்தகையதொரு கூட்டு உருவாகி விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றமையால் தான் இறுக்கமான நிலைப்பாட்டில் உள்ளோம். மேலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாற்று அணியை குழப்புகிறார்கள் என்ற வகையில் முடிவுகளை எந்தவொரு இடத்திலும் எடுக்கமாட்டார்கள். காரணம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நீதியரசர் விக்னேஸ்வரனும் இணைய வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகிறன்றார்களே தவிர, கொள்கைகளை கைவிட்டு தமிழ்த் தேசிய நீக்கத்திற்கும், காட்டிக்கொடுப்புகளுக்கும் காரணமாக இருக்கும் தரப்புகள் அனைத்தையும் இணைத்து கூட்டமைப்பினை தோற்கடிக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை.

**விக்னேஸ்வரனையும் இந்தியா பின்னணியில் நின்று இயக்குவதாக எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள்?**

கடந்த ஒக்டோபர் 06ம் திகதி நீதியரசர் விக்னேஸ்வரனே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படுவதை இந்தியா விரும்பவில்லை என்று எம்மிடத்தில் கூறியிருந்தார். அதனையே நாம் வெளிப்படுத்தி இருக்கின்றோம்.

**விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணிக்குள் சென்றால் தமிழர் அரசியலில் தமைமைத்துவம் அளிப்பதற்கு உங்களுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளமையால் பல்வேறு காரணங்களை முன்வைப்பதாக கூறப்படும் விமர்சனங்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

நீதியரசர் விக்னேஸ்வரன் எனக்கு அனுப்பிய கடிதத்தில், எமது கட்சியின் சைக்கிள் சின்னத்திற்கு




போட்டியிடுவதற்குத் தயார் என்றும், தற்போது உருவாகும் கூட்டில் அவருக்கு பின்னர் நானே தலைமை வகிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் சுரேஸ் பிரேமச்சந்திரனை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார். நான் தலைமை வகிக்க வேண்டுமொன்றோ அல்லது எமது கட்சியை முன்னிலைப்படுத்த வேண்டுமொன்றோ விரும்பியருந்தால் நாம் அந்த எழுத்து மூலமான ஆவணத்தை ஏற்றுக் கொண்டு இணைந்திருப்போம் அல்லவா? எமக்கு பதவிகள், அடையாளங்கள் முக்கியமில்லை. மக்களுக்காக நேர்மையான கொள்கையே அவசியம்.

**கொள்கை ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ள நிலையில் அடுத்த தேர்தல்களை தனித்து நின்று முகங்கொடுப்பீர்களா?**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனோ அல்லது அதனை விட மோசமான கொள்கைகளைக் கொண்ட கூட்டணிகளுடன் இணையப் போவதில்லை. தமிழ்த் தேசியக் கொள்கையில் பற்றுறுதியாக இருக்கும் தரப்புகளுடன் கைகோர்ப்பதற்கு தயாராகவே இருக்கின்றோம்

தமிழ்த்தேசியப் பாதையில் உறுதிதளராது செயற்பட தமிழ்த்தேசிய முன்னணியினருக்கு வாழ்த்தினைத் தெரிவித்து அகரம் விடைபெற்றது.

**முற்றும்...**

GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch



www.generali.ch
076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
### EINKOMMENS - VERSICHERUNGEN
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
### SPARVERSICHERUNGEN
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
### LEBENSVERSICHERUNGEN
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
### FAHRZEUGEVERSICHERUNGEN
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
### HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
### RECHTSSCHUTZVERSICHERUNG
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
### KRANKEN & UNFALLVERSICHRUNGEN
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
### HYPOTHEKEN
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்



சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை





**வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?**

**தியாக தீபம் திலீபனை நினைச்சுத் தொழுற மாதம் கடந்து போச்சுது கண்டியளோ. கடந்த வருடங்களை விடவும் மக்கள் இம்முறை திரண்டு வந்து தொழுதது ஒரு பெரிய மாற்றம் கண்டியளோ. எவ்வளவு காலம் தான் அடக்குமுறைக்குள்ள இருக்கிறது எண்டு அடிமையா இருக்கிற ஆட்களுக்கு உறைக்கும் கண்டியளோ. ஆனால் அதையெல்லாம் யோசிக்காமல் பணமும் வாழ்வும் குறியா இருக்கிற ஆட்களுக்கு அதெல்லாம் உறைக்காது கண்டியளோ.**

முப்பத்து இரண்டு வருடங்களுக்கு முதல் தன்னுடைய இருபத்துமூன்றாவது வயதில ஒரு தமிழன் நாட்டுக்காக உண்ணாநோன்பு இருந்து உயிர் நீத்திருக்கிறான் எண்டால், அது சரித்திரத்தில் நீங்கா இடம் பிடிச்ச புதிய அத்தியாயம் கண்டியளோ. இருபத்து மூன்று வயதில ஒரு பல்கலைக்கழக மாணவன் தன்னுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காமல் நாட்டுக்காக உயிர்விடுறது எண்டது இனிமேல் ஒருபோதும் நடக்க வாய்ப்பில்லை பாருங்கோ.

சரி, நாங்களெல்லாம் ஈழத்தைவிட்டு வெளிநாடுகளுக்கு ஓடி வந்து வாழப் பழகிட்டம் பாருங்கோ. இனி உப்பிடியான போராட்டங்களில நாங்கள் ஈடுபடப்போறதில்லை. ஏனெண்டால் குடும்பம் பிள்ளை குட்டி எண்டு எங்கட வாழ்க்கை போகுது பாருங்கோ. சரி, அதுதான் பரவாயில்லை, போராடினவங்களுக்கு ஏதாவது உதவலாம் எண்ட மனப்பான்மை கூட இல்லை பாருங்கோ. போராளிகளா இருந்து, உடலில குண்டுகளோடயும், தீராத நோய்களோடையும், மனச்சுமைகளோடையும் வெளிநாடுகளில தஞ்சம் புகுந்தவங்களை வைச்சு எங்கட ஆக்கள் உழைப்புத் தேடுற விளையாட்டும் நடக்குதுபாருங்கோ. ஐயோ

கொடுமையிலும் கொடுமை அப்பிடி ஒரு கொடுமை. எங்கட ஆக்கள் மேடையில மட்டும் தான் விடுதலை விடுதலை எண்டு கூவுவினம். ஆனால் மேடையால இறங்கின உடன விடுதலை என்னவிலை எண்டு கேக்குற ஆக்கள் தான் அதிகம்.

வெளிநாட்டுக்கு வந்த ஒரு போராளித் தம்பியை கிட்டடியில சந்திச்சன் பாருங்கோ. விழாவொண்டில கலந்துகொள்ள வந்து மண்டப மூலையில இருந்தார். அவரோட கதைக்கிறதுக்கு யாரும் இல்லை கண்டியளோ. நானும் தனியப் போயிருந்த படியால் அவருக்குக்கிட்டப் போய் பேச்சுக் குடுத்தன் பாருங்கோ. முதலில கதைக்கப் பஞ்சிப்பட்டார். பிறகு கொஞ்சம் கொஞ்சமா கதைக்க ஆரம்பிச்சார். ஐயோ அவர் பட்ட வேதனைகள் கொஞ்ச நஞ்சமில்லை கண்டியளோ. நான் சொல்லுறது வெளிநாட்டுக்கு வந்துசேர்ந்த பிறகு பட்ட வேதனைகளைத்தான் பாருங்கோ.

வந்த புதுசில ஆளுக்கு மொழிப் பிரச்சனை பாருங்கோ. உதவிக்கு யாரும் இருக்கேல்லயாம். வயிற்றில குண்டுபட்ட காயம் தொடர்ந்து வலியெடுத்ததால ஆள் வைத்திய சாலைக்குப் போயிருக்கு. அங்க போனால் ஆர் உங்களோட உதவிக்கு வந்தது எண்டு கேட்க, அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்பதே புரியாமல் ஆள் திண்டாடியிருக்கு. ஆவணங்கள் எல்லாம் இந்தநாட்டு மொழியில இருந்ததால அதுவும் அவருக்கு விளங்கேல்லை. தொடர்ச்சியான மருத்துவச் சிகிச்சைக்கான அனுமதிப் பத்திரம் அவர்கள் கொடுத்தும் மொழி புரியாததால ஆள் பேசாமல் வீட்டிலேயே இருந்திருக்கு.

ஒரு மாதிரி வைத்தியசாலையால ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு மொழி பெயர்ப்பாளர் வந்து எல்லாத்தையும் இவருக்கு விளங்கப்படுத்திப்போட்டுப் போட்டார். அதுக்குப் பிறகு ஆளுக்கு சிகிச்சை நடந்து ஒருகிழமைக்குப் பிறகு வீட்ட போகலாம் எண்டு அனுப்பியிருக்கிறாங்கள். சொன்னா நம்புறியளோ தெரியேல்லை பாருங்கோ, மருத்துவமனையிலிருந்து வீட்டை போறது எப்பிடி எண்ட பாதையையே ஆள் மறந்து போச்சுதெண்டால் எவ்வளவு கொடுமை எண்டு நீங்களே யோசிச்சுக்கொள்ளுங்கோ. கையில காசும் இருக்கேல்லையாம். எனக்கு ஆளின்ர கதையைக் கேட்கக் கேட்க தலைச்சுத்து வந்திட்டுது பாருங்கோ.

மருத்துவமனை வாசலிலே ஒரு தமிழரைக் கண்ட உடன இவருக்கு மகிழ்ச்சி. நிலமையைச் சொல்லி உதவி கேட்டிருக்கிறார். தன்னை வீட்டடியில கொண்டு போய் விட ஏலுமோ எண்டு கேட்டிருக்கிறார். ஆனால் அந்தத் தமிழர் உருவத்தில் மட்டும்தான் தமிழர் எண்டு ஆள் சொல்லிச் சிரிச்சுது. ஏன் எண்டு கேட்டன். தன்ர மகிழுந்தில கொஞ்சதூரம் போற







அளவுக்குத் தான் எரிபொருள் இருக்கெண்டு ஆள் சொல்லிச்சாம். அவரும் என்னைப் போல ஒருத்தராக்கும் எண்டு சொல்லி போராளித் தம்பி சிரிக்க எனக்குத் தர்ம சங்கடமாப் போச்சுப் பாருங்கோ.

உந்தச் சூழ்நிலையிலயும் எப்பிடி உங்களாலே சிரிக்க முடியுது எண்டு கேட்டன். துன்பத்திலயும் சிரிக்கிற உளப்பாங்கை எனக்குள்ள உருவாக்கியது எங்களுடைய தலைவர் பிரபாகரன் தான் எண்டு தம்பி சொல்லிச்சுது. அந்த மனப்பாங்கும் இல்லை எண்டால் நான் இப்ப இந்த இடத்தில இருந்து உங்களோட கதைச்சுக் கொண்டு இருக்க மாட்டன் எண்டு சொல்லிச்சுது தம்பி. அது எவ்வளவு உண்மையானது என்பது அவரது சிரிப்பிலிருந்து எனக்குப் புரிஞ்சுபோச்சுது கண்டியளோ.

சரியெண்டு, வதிவிட அனுமதிப் பத்திரம் எப்பிடி எண்டு கேட்டன். இரண்டு வருடம் தந்திருக்கிறார்கள் எண்டார். சட்டவாளரைத் தொடர்புகொண்டால் காலவரையறையற்ற அனுமதி பெறலாம் அல்லோ, சட்டவாளர் யாரையும் தொடர்பு கொள்ளேல்லையோ எண்டு கேட்டன். அதுக்கும் மொழி பெயர்ப்பாளர் தேவை, சட்டவாளருக்கு கொடுக்கிற காசு அளவு இப்ப மொழி பெயர்ப்பாளரும் கேட்கிறாங்கள் எண்டார் தம்பி. என்ன தம்பி அவ்வளவு கேக்கிறாங்களோ எண்டு கேட்டன். அதை ஏன் கேக்குறியள் ஐயா, என்னுடைய வீட்டுக்குப் பக்கத்தில கடை வைச்சிருக்கிற ஒரு ஆபிரிக்கன் தனக்குத் தெரிஞ்ச ஒரு தமிழரை எனக்கு அறிமுகப் படுத்தி விட்டான்.

அந்தத் தமிழர் இஞ்ச பெரிய பேச்சாளரா இருந்தவராம். யாருக்குப் பேசுறனியள் எண்டு நான் கேட்கேல்லை. அவர் தன்னுடைய மகளை எனக்கு மொழி பெயர்ப்பாளராக அனுப்பி விடுறன் எண்டு சொன்னார். என்ன ஒரு மனிதாபிமானம் எண்டு நான் மனசுக்க நினைச்சுக் கொண்டு எந்ததிகதியில மொழி பெயர்ப்பாளர் தேவை வேண்டும் சொல்ல விட்டன். அன்று காலையில சட்டவாளர் அலுவலகத்துக்கு அந்தப் பொறுப்பாளருடைய மகள் வந்தாவாம் பாருங்கோ. வந்து

ஒருமணித்தியாலமாக மொழிபெயர்ப்புச் செய்தாவாம்.

செய்யும்போது தான் அஞ்சு நிமிசம் சொல்லுற விசயத்தை அவ பத்து வினாடியில சொல்லிப் போடுவாவாம். தான் சொல்லுறதை அப்பிடியே சொல்லுறாவோ எண்டும் தனக்கு ஒரு சந்தேகமாம். ஏதும் கேட்டுக் கீட்டு அவவுக்கு கோபம் வந்து இனிமேல் மொழிபெயர்ப்புக்கு வரமாட்டன் எண்டு சொல்லிட்டால் என்ன செய்யுறது எண்ட யோசனையில தான் ஒண்டுமே கேக்கேல்லையாம். எல்லாம் முடிய வெளில வந்து 50 யூரோ தாங்கோ எண்டாவாம்.

இதென்னடா காசு கேக்கிறா எண்டு கேட்கவும் முடியேல்லையாம், உங்கட அப்பா காசு எண்டு எனக்குச் சொல்லேல்லை எண்டு தம்பி இழுக்க, அவ எகிறீட்டாவாம். உதென்ன கதை சொல்லுறீங்கள்.? இங்க காசு இல்லாமல் யாரும் வந்து உதவி எதுவும் செய்ய மாட்டினம் எண்டு சொன்னாவாம். காசு குடுத்துச் செய்யுறது உதவி இல்லை, அது வேலை எண்டு சொல்ல வாய் வந்தும் அப்படியே மனக்குள்ள விழுங்கீட்டன் எண்டு ஆள் சொல்லிச்சுது.

கையில நாற்பது யூரோ தான் இருக்கு எண்டு சொல்ல, பரவாயில்லை தாங்கோ எண்டு அதை வாங்கிக் கொண்டு போட்டாவாம். போறதுக்கு முதல், இனி ஏதாவது உதவி வேணும் எண்டால் முற்பணம் தந்தபிறகு தான் வருவன் எண்டு சொல்லிப் போட்டுப் போறாவாம். உதையெல்லாம் உதவி எண்டால், பணத்தை எதிர்பார்க்காமல் செய்யுறதுக்குப் பெயர் என்ன எண்டு தம்பி கேட்க, என்னுடைய வேட்டி கழன்று கீழவிழுந்து போன மாதிரி இருந்துது பாருங்கோ.

வேலை ஏதும் செய்யுறியளோ எண்டு கதையை மாத்தினன் பாருங்கோ. ஓம் ஐயா வேலைக்குப் போறன். ஆனால் உணவகம் ஒன்றில சமையலறை உதவியாளராக செய்யுறன் எண்டார். அதைச் சாட்டாக வைத்தே அடிமட்டச் சம்பளம் தான் தாறார் முதலாளி எண்டார். அவரும் தமிழோ எண்டு கேட்டன். உப்பிடிச் செய்யுறது நம்மட ஆக்கள் தானே எண்டார் அவர். அதுக்கு மிஞ்சி என்னால தம்பியோட கதைக்க முடியேல்லை. பேசாமல் வேலையை விட்டுப்போட்டு வீட்டில இருமன் எண்டன். ஐயோ கடன் கட்டிமுடிக்க ஏலாது எண்டார். என்ன கடன் எண்டு கேட்டால் அது எல்லாத்தையும் விடப் பெரியசோகம் பாருங்கோ.

தம்பி ஒரு நாள் வேலைக்குப் போறதுக்காக பேருந்துத் தரிப்பிடத்தில காத்திருந்திருக்கிறார். அந்தநேரமாகப் பார்த்து ஒருத்தர் மகிழுந்திலே வந்து, தம்பி எங்க போகோணும் நான் கொண்டுபோய் விடுறன் எண்டு கேட்க, அட தமிழ் அண்ணை எண்டு தம்பியும் ஓடிப்போய் ஏறியிருக்கிறார். ஏறின உடன தம்பியின்ர பிறப்பு, வளர்ப்பு, குடி, கோத்திரம் எல்லாத்தையும் ஆள் விறாண்டி எடுத்துப் போட்டுதாம்.

அப்ப என்ன மாதிரி, யார் வெளிநாட்டுக்கு எடுத்து விட்டது எண்டு ஆள் தூண்டிலைப் போட, அது தூண்டில் எண்டு தெரியாமல் தம்பி முழுக் கதையையும் சொல்லிப்போட்டுது பாருங்கோ. என்னுடைய மச்சான் தான் இருப்பது இலட்சம் கட்டிக் கூப்பிட்டு விட்டவர் எண்டு தம்பி சொல்ல, அப்ப கடனை எப்ப கட்டிமுடிக்கப்போறீர் எண்டு ஆள் கேட்டிருக்குது. அதோட விடாமல், உமக்கு வேணும் எண்டால் நான் கடன்





IMPORTAS
Cash & Carry
தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...
பேர்ண் நகரில்
புதிய உதயம்
வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
"இம்போட்தாஸ்" நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது
வாடிக்கையாளர் அனைவருக்கும்....
தீபாவளி
நல்வாழ்த்துகள்
Kranichweg 8, 3074
Muri Bei Bern
☎ 031 951 24 44
Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch


NEW ARRIVAL
AGAM
Healthy and tasty Foods
அகம்
Happy Diwali
அகத்தின் சுவை
சமையலில்
தெரியும்
உங்கள்
சமையலுக்கு தேவையான
அனைத்து
உணவுப் பொருட்களையும்
தரமான அகம் தயாரிப்பில்
உங்கள் அபிமான
கடைகளில்
பெற்றுக் கொள்ளலாம்.
StaR-Impex
www.star-impex.de

எடுத்துத்தாறன் எண்டு ஆள் சொல்லியிருக்கு.

தம்பியும் அடிநுனி தெரியாமல் ஓம் எண்டு சொல்ல, அடுத்த கிழமையே ஒரு வங்கியில கதைச்சு ஆளுக்கு பத்தாயிரம் யூரோ கடன் எடுத்துக் குடுத்திட்டாராம். ஆனால் வட்டியோட ஆள் எவ்வளவு கட்டவேணும் தெரியுமே ..? பதினாறாயிரம் யூரோ கட்டவேணும் பாருங்கோ. பத்து வருடக் கடன் அது. இந்த நபர் உப்பிடியான இடைத்தரகர் வேலை பார்த்துக் கொள்ளையடிக்கிற ஆள் கண்டியளோ. கிட்டத்தட்ட தரகுக்கூலி மட்டும் அவருக்கு எக்கச்சக்கமாகத் தேறியிருக்கும். ஆனால் பத்து வருடத்துக்கு தம்பி கடன் கட்டியே ஆகவேணும் பாருங்கோ. எட வட்டிக்குப் பிறந்த ஈனப்பிறப்புகளே, உப்பிடி மற்றவனை அடிச்சுப் பிழைக்குறதும் ஒரு பிழைப்பே சொல்லுங்கோ பாப்பம்.

கைகாலில சுகவீனத்தோட, வயிற்றிலே சிகிச்சை செய்த வலியோட ஒருத்தனை வாட்டி உழைக்கிற காசு உங்கட குடும்பத்தில எப்பிடியடா ஒட்டும் ? உப்பிடியான பிழைப்புக்கு நீங்கள் வேற ஏதும் தொழில் செய்து வாழலாமே பரதேசிக் கூட்டமே ? ஆ ஊ எண்டால் நானே தமிழ்த் தேசியவாதி எண்டு மேடையில சங்கு ஊதிப்போட்டு, பிறகு ஒரு சாதாரண மொழி பெயர்ப்புக்குக் காசு வாங்குறவனுக்கும், வங்கியில் தரகரா நிண்டு பகல் கொள்ளை அடிக்கிறவனுக்கும் சேர்த்துத்தானே அவன் அந்த மண்ணிலே நிண்டு போராடினவன்..? சரி அதுக்கு நன்றிக்கடன் கூட வேண்டாம், அதல பாதாளத்தில தள்ளிவிடுற வேலையைச் செய்யாமலாவது இருக்கலாம். சத்தியமாச் சொல்லுறன், பிற்காலத்திலே நோய் நொடி வந்து, இழுத்துப் புழுத்துத்தான் நீங்களெல்லாம் கட்டையில போவியள்.

**பணம் இருக்கும் மனிதரிடம்**
**மனம் இருப்பதில்லை**
**மனம் இருக்கும் மனிதரிடம்**
**பணம் இருப்பதில்லை**
**பணம் படைத்த வீட்டினிலே**
**வந்ததெல்லாம் சொந்தம்**
**பணம் இல்லாத மனிதருக்கு**
**சொந்தமெல்லாம் துன்பம்**

- அப்ப வரட்டே





# புலிகளின் கொரில்லாப் போர்

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

## தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

போர் என்பது இரு சிக்கலான அமைப்புகளுக்கிடேயே நிலவும் போட்டி ஏற்கனவே பார்த்தபடி சிக்கலான அமைப்புகளில் யார் அதிக வேறுபாடுகளுடனான உத்திகளைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்குத்தான் வெற்றி. புலிகள் ஆரம்பகட்ட ஈழ விடுதலைப் போர்களில் இந்திய, இலங்கை இராணுவங்களைத் தோற்கடித்தற்குக் காரணம் கொரில்லாப் போர்முறைதான். இதை சிக்கல் வரைபடம் மூலம் பார்த்தால் தெளிவாகப் புரியும் (படம்-2):

படம் -2 புலிகளின் கொரில்லாத் தாக்குதல்






புலிகள் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து, பதுங்கி பல்வேறு தாங்குதல்களைத் தொடுத்தார்கள். ஒரே தலைமை என்று இருந்தாலும், சிறு குழுக்கள் சுயமாக இயங்கும் தன்மையைக் கொண்டிருக்கும். சிறு குழுக்கள் தாங்களே இலக்கையும், தாக்கும் நேரத்தையும், முறைகளையும் வகுத்தார்கள். அவர்கள் எங்கு பதுங்கி இருக்கிறார்கள் எப்பொழுது தாக்குதல் நடத்துவார்கள் என்று எதிரிக்குத் தெரியாது. எதிரிகள் இதற்கு மாறாக பெரும்படை கொண்டு இயங்கினார்கள்.

யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பதுபோல அவர்களின் நகர்வுகளை புலிகளால் எளிதாக அறிய முடிந்தது. மொத்தமாக புலிகள் அதிக அளவு வேறுபாடான தாக்குதல் உத்திகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தினார்கள். மாறாக எதிரிகள், ஒரு படையதிகாரி

திட்டமிட்டு பெரிய நகர்வுகளை மேற்கொண்டார்கள், ஆனால் அந்நகர்வுகள் அதிக வேறுபட்டது அல்ல; மேலும் புலிகள் அவர்களின் நகர்வுகளை முன்கூட்டியே அறிந்து பாதையிலிருந்து விலகிக் கொள்வதால், தாக்குதலுக்கான



வாய்ப்புகளும் குறைவு. கீழ்நிலை சிப்பாயிலிருந்து மொத்த படையும் மேலுள்ள அதிகாரியின் திட்டபடிதான், அதனால் அவர்களின் நகர்வுகள் புலிகளைப் போன்று சுதந்திரமான சிக்கலான நகர்வுகளாக இல்லை. இந்த வேறுபாடுதான் கொரில்லாப் பொறிமுறையில் புலிகள் வெற்றி கொண்டதற்குக் காரணம்.

இந்த கருத்து மிகமுக்கியமானது என்பதால் இதை இன்னொரு உதாரணம் கொண்டு சிறப்பாக புரிந்து கொள்ளலாம். நீங்கள் பள்ளியில் ஒரு தேர்வுக்குப் போகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். தேர்வுக்கு மூன்று வினாத்தாள்கள் *(Question paper)* உள்ளன. ஒரு வினாத்தாளில் 10 கேள்விகள் உள்ளன, அந்த பத்திற்கும் விடையளிக்க வேண்டும். இரண்டாவது வினாத்தாளில் 15 கேள்விகள் உள்ளன, அதில் 10 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். மூன்றாவது வினாத்தாளில் 20 கேள்விகள் உள்ளன, அதிலும் 10 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

எந்த வினாத்தாள் உங்களுக்குப் பிடிக்கும்? அனைவருக்கும் மூன்றாவது வினாத்தாள்தான் பிடிக்கும் என்பது தெளிவானது. ஏனென்றால் மூன்றாவது வினாத்தால்தான் "அதிக வாய்ப்புகளை" அளிக்கிறது. எப்பொழுது வாய்ப்புகள் கூடுகிறது, அப்பொழுது வெற்றி கூடுகிறது. இது தேர்வுக்கு மட்டுமல்ல அனைத்து சிக்கலமைப்புகளின்



சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles

தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

உயர்தர புடவைகள்
மற்றும் துணி வகைகள்
வாங்க சிறந்த இடம்

வாடிக்கையாளர் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துகள்...

Rani palace

044 440 60 52
ranipalace60@gmail.com

Tel : 044 440 60 52

Neugasse 60, 8005 Zurich - Switzerland



வெற்றிக்கும் இதுதான் அடிப்படை. தற்கொலை செய்துகொள்ள முனையும் ஒருவரிடம், ஏன் என்று கேட்டால் “வேறு வழி” இல்லை என்று பதில் வரும். வாய்ப்புகள் தான் அனைத்து உயிர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் வெற்றிக்கும் அடிப்படை.

புலிகள் சிறுசிறு குழுக்களாக சுதந்திரமாக இயங்கியதால் தாக்குதலுக்கு சிங்களப் படைகளை விட அதிக வாய்ப்புகளை உத்திகளை உருவாக்கினார்கள். இதுதான் வெற்றிக்கான சூத்திரம். பார்ப்பதற்கு ஒரு பலமான தலைமையின் கட்டளை மூலம் இயங்குவது சிறப்பாகத் தோன்றலாம், ஆனால் அதுதான் பலவீனமே. பிரிந்து வெவ்வேறு விதமாகத் தாக்கும்பொழுது எதிரி நிலைகுலைந்து விடுகிறான். இவ்வாறு பிரிந்து தாக்குவதால் எதிரியை ஓட வைக்க முடியும், ஆனால் நிலத்தை நிரந்தரமாகத் தக்கவைக்க முடியாது. அதுதான் கொரில்லாப் போர்முறையின் பலவீனமும்.


## ஏன் இறுதிப்போரில் பின்னடைவு ஏற்பட்டது?

புலிகள் தோன்றியதிலிருந்து படிப்படியாக பரிணமித்து வலிமை மிக்க இயக்கமாக மாறி மாபெரும் போர் சாதனைகளைப் படைத்தனர். ஆனால் இறுதிப் போரில் வெற்றிகொள்ள முடியவில்லை; இறுதியில் இயக்கம் ஈழத்தில் முற்றிலும் இல்லாமல் போனது. இதை எவ்வாறு புரிந்து கொள்வது? இதை வரலாற்று நிகழ்வுகளைக்கொண்டு சிக்கல் வரைபடத்தை வரைந்து பின்வருமாறு விளக்கலாம் (படம்-3).

புலிகளின் ஆரம்ப காலத்தில், சிறு குழுக்களைக் கொண்டு கொரில்லாப் பொறிமுறைகளை மட்டும்



படம் -3 படைகளின் பரிணாமம்




பின்பற்றினார்கள். இந்திய சிங்களப் படைகள் மரபுவழித் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். ஏற்கனவே நாம் பார்த்தபடி, இதில் புலிகளின் செயல்பாடுகள் அதிக வேறுபாடுகளுடன் இருந்ததால், அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. (படம்-3: புலிகள்-1, சிங்களம்-1)

கொரில்லாப் போர்முறைகளை மட்டும் கொண்டு நிலத்தைத் தக்கவைக்க முடியாது என்பதால், புலிகள் மரபுவழி இராணுவமாகப் பரிணமிக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. மரபுவழி இராணுவத்தில் படைகள் ஒன்று சேர்ந்து இயங்கி நிலத்தை காக்க வேண்டி இருப்பதால், அவர்களின் கொரில்லா தாக்குதல் எண்ணிக்கைகள் குறையும். இவ்வாறு மரபுவழிப் படையாக பரிணமிக்கும் காலத்தில், கொரில்லாத் தாக்குதல்களும் அவ்வப்போது மரபுவழித் தாக்குதல்களும் எனக் கலந்து உபயோகிக்கப் பட்டது.

சிங்களம் நடத்தும் மரபுவழித் தாக்குதலுக்கும், புலிகள் நடத்தும் மரபுவழித் தாக்குதலுக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. புலிகள் எபோழுது தாக்குவார்கள், எங்கே தாக்குவார்கள், எவ்வளவு நேரம் தாக்குவார்கள், இறுதி இலக்கு என்ன என்று யாருக்கும் தெரியாது. சிங்களம் ஒவ்வொரு நாளும் பக்கு பக்கென்று எங்கே அடி விழும் என்று காத்திருப்பார்கள். சிங்களப் படைகள் இதற்கு மாறாக, முழுத்த திட்டம் வகுத்து உலகுக்கே அறிவித்து விட்டு, பெரும்படை கொண்டு நகர்வார்கள்.

உதாரணமாக சிங்களத்தின் செயசிக்குறு நடவடிக்கையை எடுத்துக் கொள்ளலாம். ஒன்றரை வருடங்களாக கிஏ.9 வீதியைக் கைப்பற்ற முனைந்த யுத்தம் இறுதியில் தோல்வியில் முடிந்தது. மொத்தத்தில் புலிகளின் தாக்குதல் வாய்ப்புகளின் எண்ணிக்கை, சிங்களத்தின் தாக்குதல் வாய்ப்புகளின் எண்ணிக்கையை விட அதிகம். அதாவது புலிகளின் தாக்குதல் அதிக வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. (படம்-3: புலிகள் -2, சிங்களம்-2).

நிலத்தை முழுதுமாகக் கைப்பற்ற புலிகள் மேலும் பெரிய மரபுவழிப் படையாக பரிணமிக்க வேண்டியத் தேவை இருந்தது. அவ்வாறு பரிணமித்து அடித்த அடியில்தான் சிங்களமும் உலகமும் ஆடிப்போனது. ஆனையிறவு கைப்பற்றப்ப பட்டது, வன்னியிலிருந்து சிங்களம் துடைத்தெறியப்பட்டது, புலிகள் யாழ்ப்பாணத்தை நெருங்கினார்கள். அதன் பின்புதான் உலகம் தலையிட்டு சிங்களத்தைக் காப்பாற்றியது.






வாடிக்கையாளர்களின் பேராதரவுடன்
17ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர் அனைவருக்கும்....
தீபாவளி
நல்வாழ்த்துகள்
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

பாகம்.90 ▶ அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?




தமிழ் மக்களின் தாயக விடுதலைத் தாகத்தின் எழுச்சிக் குரலாக தமிழ் மக்கட் பேரவையின் 'எழுக தமிழ் - 2019' பேரணியும், கடை அடைப்பும் பிரமிக்கத்தக்க அளவில் வெற்றி பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. ஆனால், குறுக்குச் சால் ஓட்டுவதில் வல்லவர்களான தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழர் தேசியக் கூட்டணியின் தீவிர பக்தர்களின் எதிர்ப்பும், எதிர்ப் பிரச்சாரங்களும் கவலை அளிப்பதாக உள்ளன. இலங்கை அரசு மற்றும் அந்நிய சுரண்டல் அரசுகளின் பலவித சலுகைகளையும், சன்மானங்களையும் பெற்று மகிழும் கூட்டத்தினருக்கு இப்படியான மக்கள் எழுச்சிகள், எரிச்சலை மூட்டத்தான் செய்யும்.

அதனால் அவர்கள் செய்யும் தமிழ் இன துரோக அரசியலை, தமிழின உணர்வாளர்கள் சகித்துக் கொள்ள வேண்டும் என எவரும் எதிர்பர்க்க முடியாது. எங்களின் உணவையும், ஊரையும் பங்கு போட்டு அனுபவிக்கும் இவர்களின் நன்றி கெட்ட தனத்தை, எமக்கு எவ்வகையிலும் ஒட்டோ, உறவோ கொண்டிருக்காத அந்நிய தேச மக்கள் காட்டும் அக்கரையும், அனுதாபமும் அளவிட முடியாதவை. அவற்றுள் சனல் 4 தொலைக்காட்சியும், அதன் தொகுப்பாளர் ஆற்றிய பங்களிப்பும் அளப்பரியதும். வரலாற்றில் பொன் எழுத்துக்களால் அவர் பெயர் பொறிக்கப்படத்தக்க அரிய சாதனையும் எனலாம்.

அடுத்து பல வழிகளிலும் ஆதரவாக பணியாற்றிச் சென்ற முன்னாள் மனித உரிமை ஆணையாளர்களான ஆபர் லூயிஸ், மற்றும் நவநீதம் பிள்ளை போன்றவர்களின் நேர்மையான பணிகளும், பதிவில் வைத்துவிட்டுப் போன அறிக்கைகளும் என்றோ ஒரு நாள் எம் தாயக மீட்புக்கு பேருதவியாக விளங்கும் என்கிற நம்பிக்கையைத் தருகின்றன. அந்த வகையில் தற்போதைய ஆணையாளரின் பல கருத்துகளும், அறிக்கைகளும் அதே நம்பிக்கையை ஊட்டும் அதே வேளையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பும், அதன் உறுப்பினர்களும் தொடர்ந்து தமிழ் மக்களின் முதுகில் வேல் பாய்ச்சும் சதி வேலைகளில் அக்கரை காட்டுவது கவலை அளிக்கிறது.

இவ்விடத்தில் ஐ.நா. பொதுச் செயலரின் உள்ளக மீளாய்வு குழுவின் அறிக்கையில் 2009ல் ஸ்ரீ லங்காவில் இடம்பெற்ற பேரழிவில் ஐ.நா.வின் செயற்பாடு 'பாரிய தோல்வி' என சார்லஸ் பெற்றிய வெளிப்படுத்தியிருப்பதும் எமக்கு ஒரு சாதகமான விடயமே!. மேலும், அண்மையில் சர்வதேச சித்திரவதைகள் தடுப்புப் பேரவையின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூக்கா பின்வருமாறு ஐ.நா.வுக்கு அறிக்கை செய்திருக்கிறார்.

'வெளிநாடுகளில் இருக்கும் எங்களால் இத்தனை பெரிய அளவில் சாட்சியங்களைப் பெற முடியுமாக இருந்தால், அந்த நாட்டில் தேவையான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் சுதந்திரமான குழு ஒன்று அறிக்கை தருமாக இருந்தால் எப்படி இருக்கும்? என யோசித்துப் பாருங்கள்'. தொடக்கத்தில் நாங்கள் இந்த (ஸ்ரீலங்கா) அரசுக்கு ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணைக் குழுவை கவுதமாலாவில் உள்ளது போன்ற ஒன்றை உருவாக்க உதவுவதாக வாக்களித்தோம். ஆனால், அவர்களிடம் இருந்து ஒரு பதிலும் கிடைக்கப் பெறவில்லை. இத்தகைய நிறுவன மயப்படுத்தப்பட்ட அடுக்குமுறை அமைப்புகள் கலைக்கப்பட வேண்டியது அவசியமாகும். இல்லாது போனால் உடைக்கப்பட்ட, காயப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகும்.

இந்த அளவுக்கு சர்வதேச அமைப்புகளும், அதிகாரிகளும் எமது மக்களின் அவலங்களைப் பற்றிய கரிசனைகளைத் தெரிவித்து வரும் நிலையில், எமது மக்களின் தலைவர்களுக்கு மட்டும் எதுவமே தெரியாத நிலை மட்டும் எப்படி நீடிக்கிறது?

இவர்களைப் பூண்டோடு கைலாயம் அனுப்பினால் மட்டுமே நம்




இனம் வாழ் முடியும் என்பதை, எமது மக்கள் உறுதியாக நம்பினால் மட்டுமே 'எழுக தமிழ்' என்ற எமது மக்களின் கனவு நிறைவேறும் நாளும் வரும்.

(தேடல் தொடரும்.)




# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

### பணம்

பணம் புகழ்
பெருமைக்காக
பலதும் பறக்கும்
பஞ்சாக
நிலைமை அறிந்து
நேர்மை நிலையாக
நிலைத்து நிற்கும்

கெங்கா ஸ்டான்லி

## அகர கவிக்களம்....

### ஆஞ்சாமி!..

மனைவியின் நாளாந்த திட்டு
பிள்ளைகளின் அருவருப்பு
மருத்துவமனையே தஞ்சம் - என
கிடக்கிறான் ஆரோக்கியசாமி!...

### மனிதர்கள்!...

அழுக்கு ஒட்டை ஆடைகள்
அழகில்லா அசிங்க மனிதர்கள்
அனுதினமும் பிச்சை எடுக்கும் - மனம்
அழுக்கில்லா மனிதர்கள்!...

### பெண்!..

பச்சிளம் குழந்தைகளைக் கூட
பதம் பார்க்கும் இவ்வுலகில்
எங்களை ஏன் படைத்தாய் இறைவா...?
பெண்ணாக ஏன் படைத்தாய்....?

### வெறுமை!...

வெட்டி விழுத்திய மரங்கள்
சிதைந்து கிடக்கும் குருவிக்கூடு
மரங்கள் மாத்திரமல்ல
மனிதர்களும் வெறுமையாகத்தான்!...

வ.சிவராசா



"உளம் திறக்கும் உண்மைகள்...;" என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

## அலைபேசி அவலம்

அருகமர்ந்து
தோள் சாய்ந்து
அன்புக் கதை பேசிய
காலம் காணாமல்
போனது வீட்டில்
ஆளுக்கொரு திரையில்
மூழ்கிப்போனதால்



## இயற்கையின் காதல்

நீரைப்பொழிந்து குளிராக்கினாய்
தீயைக் கொட்டி
சூடாக்கினாய்
நிலத்தில் படர்ந்து
பசுமை சீராக்கினாய்
காற்றைத் தந்த
கனியும் இசையாக்கினாய்
வானம் தந்து
வாழ்வை சீராக்கினாய்
பஞ்சபூதங்களால் எனைப்
பரவசமாக்கினாய்

## கடந்து சென்ற காலங்கள்

வெள்ளிக் கிழமைதனில்
வெண் மலர் மாலையோடு
கோவில் நோக்கி
மெல்ல நடந்திட
செல்லக் கொலுசின்
சிணுங்கல் மொழி கேட்டு
எட்டி என் முன்னே
நீயும் நடந்திட
நீ வரும் வழி பார்த்து
அகன்று கவிழும் என் விழி
சொல்லித் துணிவின்றி
கடந்திட்டோம்
காலம் வருமென



## ஏக்கம் தவிர்

தொட்டால் சிலிர்க்கிறேன்.
உன் தேடலுக்கு தவிக்கிறேன்
விட்டால் பறந்து விடுவாயென்
விழிகளுள் பூட்டி வைத்து
திறக்காமல் ரசிக்கிறேன்.
உன் வண்ண முத்தங்களின் எச்சத்தால்
என்னுள் கவிதையை பிரசவிக்கிறாய்

## பெரு நேசம்

உடனிருக்கையில்
உண்மையாய் இருக்கவும்,
விலகிய பின்பும்
வெறுக்காமலிருக்கவும்
ஆகப்பெரும் நேசமொன்று
அவசியப்படுகிறது..

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

**www.pagevision.ch**

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

Sehr Schnelle Lieferung!
Hauslieferungen
Vor-Ort Installationen
Netzwerklösungen für Firmen
Reparaturen aller Marken!

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

## iPhone Reparaturen

www.iphonefan.ch

72 வருட சுதந்திர இலங்கையில் சிறுபான்மை இனங்கள் குறிப்பாக, ஈழத் தமிழ் இனம் கண்ட அழிவை, வேறெந்த இனமும் கண்டது கிடையாது. அதற்குப் பெரிதும் காரணமான அரசியல் தலைமைகளை முற்றாக மாற்றாமல், தமிழினம் எந்தவித நன்மையும் காண முடியாது என்பதைவிட, இலங்கையில் வாழவே முடியாது என்பதை சிங்களம் சொல்லிலும், செயலிலும் காட்டி வருகிறது.

தமிழ் மக்களை கொன்று அழிப்பதிலும், தமிழர் நிலங்களையும், வளங்களையும் பறிப்பதிலும் மட்டுமே சிங்களத்தோடு ஒத்துழைத்தும், தமிழர் நலன்களைப் புறக்கணித்தும் வரும் இந்தியா, அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகளை நம்பி, தமிழரின் அரசியலைச் செய்து வரும் அரசியல் கட்சிகளையும், அரசியல் யாப்பையும் தமிழ் மக்கள் முற்றாகப் புறந்தள்ளும் அரசியலை மட்டுமே தமிழ் மக்கள் முன்னெடுப்பதன் மூலமே இலங்கையில் தமிழ் இனம் நீடித்து வாழ முடியும் என்ற யதார்த்த நிலையை நாம் ஏற்றுச் செயற்படுவது கட்டாயமாகும்.

எம் இனத்தின் அழிவுகளுக்கு எல்லாம் முக்கியக் காரணமாக இருந்ததும், இருப்பதும் எமக்கிடையே ஆளுக்கு ஒரு கட்சியும், விடுதலைப் போராட்டக் குழுக்களையும் அமைத்ததோடு, அவை தமக்குள்ளே முட்டி மோதி, போட்டிப் போட்டு சிங்களத்திள் தமிழின அழிப்புக்குத் துணை போயினர் என்ற உண்மையை யாரால் மறுக்க முடியும்?

இப்பொழுது அதே தலைமைகளும் கட்சிகளும், குழுக்களும் தமிழ் மக்களை அதே அரசியல் அமைப்பு விதிகளுக்குக் கட்டுப்பட்டுப் போராடி வெல்லப் போகிறோம் எனச் சொல்வதும், அவற்றை நம்பி தமிழ் மக்கள் வாக்களிப்பதும், எத்தனை கேவலமான முட்டாள் தனமாக இருக்கும்? வெற்றிக் கோட்டை எட்டும் நிலையில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், 2 இலட்சத்துக்கும் அதிகமான தமிழ்ப் பொது மக்களையும், சிங்களமும் இந்திய, அமெரிக்க சர்வதேச நாடுகளும் தமிழ் இன அழிப்பைச் செய்ய உதவிய இவர்களா எம்மைக் காப்பாற்றுவார்கள்? என நம்ப வேண்டும்.

எமக்குத் தேவை அரசியல் தலைவர்கள் அல்ல. சித்தாந்தங்களின் அடிப்படையில் சிதறி நின்று, இன ஒற்றுமையைச் சீர்குலைத்து இனத்தை



# மாறிய தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளை மாற்றுவோம்!

மனோ



தலைமைக்குத் தயார் நிலையில் தாயக்குலம்

நாசப்படுத்தும் தனி நபர் தலைமைகள் அல்ல. இவர்களுக்கு அமைப்புகளும், அமைப்பு ரீதியான கட்டமைப்புகளும், நடைமுறைகளும் கிடையாது. செயற்குழு, பொதுக் குழு என்கிற பெயரில் நாலு பேர்கள் கூடுவார்கள் அல்லது கூடி முடிவு எடுத்ததாகப் பத்திரிகைச் செய்தியைக் கொடுத்துவிட்டு, ஏமாற்றும் அரசியலைச் செய்கிறார்கள். இவர்கள் யாருக்கும் பொறுப்புக் கூறாத, பொறுப்பற்ற அரசியல் தரகர்கள். இவர்களின் அரசியலைத் தமிழினம் இன்னமும் ஏற்க முடியாது. **இந்த நிலையில் முன்னாள் நீதி அரசரும், வடமாகாண முதல் அமைச்சருமான திரு.விக்கினேஸ்வரன் ஐயாவைத் தமிழ் இனத்தின் சார்பாகக் கேட்டுக் கொள்வது இவற்றைத்தான்;:-**

**அரசியல் கட்சித் தலைவர்களையோ, போராட்டக் குழுக்களையோ உங்கள் தலைமையில் இணைத்து, தமிழ் மக்களின் தலைகளில் புலிகளின் தலைவர் கட்டிவிட்டது போல நீங்களும் கட்டி விடாதீர்கள். இவர்கள் தாங்களும் ஒன்றாகச் செயற்பட மாட்டார்கள், மற்றவர்களையும் செயற்பட விடமாட்டார்கள். இவர்கள் உங்கள் நற்பெயருக்கு மேலும் அவப் பெயரையே தேடித்தருவார்கள்.**

எங்களுக்கு தனித் தலைமை வகிக்கும் ஆற்றல், உங்களை விட்டால் வேறு ஆள் தெரியவில்லை. உங்கள் முதுமையும், அரசியல் சூதுவாதற்றத் தன்மையும், உங்களால் தனித்து நின்று எதையுமே சாதித்துவிட முடியாது என்பதையே உணர்த்துகின்றன. ஆனால், உங்களால் ஒரு செயற்திறன் கொண்ட கூட்டுத் தலைமையை உருவாக்க முடியும்.







அத்தகைய கூட்டுத் தலைமை பின்வரும் முறையில் அமைவதே நலம் என நம்புகிறோம். அப்படியானவர்களைக் களத்தில் செயற்பட்டு வரும் உங்களால் மட்டுமே அடையாளப் படுத்தித் தமிழ் மக்களை வழிப்படுத்த முடியும் எனவும் நம்புகிறோம்.

நாம் எதிர்பார்க்கும் கூட்டுத் தலைமை 9, 11 அல்லது ஒற்றைப் படையான வேறு எண்ணிக்கையில் அமைக்கப்படலாம். அதில் சரி பாதி பெண் உறுப்பினர் அவசியம். உறுப்பினர் சகல இன, மத, அறிவியல் சார்ந்த வல்லுநராக இருப்பதும், நற்குணங்கள் நல் ஒழுக்க சீலர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். தமிழ் மக்கள் அரசியல் கல்வி, கலாச்சாரம் தொடர்பான எந்த ஒரு கொள்கைத் திட்டமும் இத்தலைமையின் ஒருமித்தத் தீர்மானமாக இருப்பது அவசியம். இந்தத் தலைமை முறைப்படி தெரிவு செய்யப்பட்ட பொதுக் குழு, செயற்குழுக்களால் வழிநடத்தப்பட வேண்டும்.

ஆண்டுக் கூட்டங்களும், பொதுக் குழுக் கூட்டங்களும் எந்த ஒரு கட்சியோ, குழுவோ முறையாகச் செயற்படாத நிலையை இந்த அமைப்பில் இல்லாதபடிக்கு இந்த அமைப்பின் விதிகள் இருக்கும் நிலையை உறுதி செய்வீர்கள் எனவும் எதிர் பார்க்கிறோம்.

ஐம்பதுக்கு ஐம்பது சமஉரிமை கேட்டு, தேர்தலில் பெரு வெற்றி கண்ட அமரர் ஜீ.ஜீ.யின் தலைமையில் இருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி, தனது சுயத்தை இழந்து, தமிழரசுக் கட்சியை உருவாக்கி, உதவாக்கரை அரசியல் கலாச்சாரத்துக்கு வித்திட்டு போனது. அது வாங்கித் தந்த காங்கேசன் சீமந்துத் தொழிற்சாலையும், பரந்தன் இராசயன ஆலை, வாழைச்சேனை காகித ஆலைகள் தமிழ் இனத்தை வாழ வைக்கவில்லை.

ஆனால், அவரது பேரன் கஜேந்திரகுமார், பொன்னம்பலம் இன்று அதே கட்சியின் தலைவராக அரசியல்

நடத்த முற்படுகிறார். அதுவும் அதே பழைய பாராளுமன்றத் தேர்தல் மூலம் எதற்காக வருகிறார்?. அவர் பேசும் அரசியலுக்குப் பாராளுமன்ற அரசியலில் தீர்வு உண்டா? எனக் கேட்டால் அவரது பதிலும் இல்லை என்பதாகத்தான் இருக்கும்.

சமஷ்டி ஆட்சி முறை பேசிய 65 வருட காலத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையான தமிழ் அரசுக் கட்சி, தந்தை செல்வா தொடக்கம் அமிர்தலிங்கம், சம்பந்தன், மாவை, சேனாதிராசா என நாலாவது தலைமுறை நடத்திய அரசியல் தகிடு தத்தங்களால் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் தேசியக் கூட்டமைப்பு என்ற பல அவதாரங்களை எடுத்து, தமிழ் இன அழிப்புக்கு முழுமையான ஆதரவை எதிரிகளுக்கு வழங்கி, அருந்தொண்டாற்றி வருவது இன்று வரைத் தொடருகிறது.

நாளையும் அது தொடரும். வரும் நாளிலும் காலமெல்லாம் சிங்களத்தின் அடிமைகளாகத் தமிழ் இனத்தை வைத்திருக்கும் அரசியலைத்தான் அது தொடரும். இத்தலைமைகளின் ஆதரவோடு நடைபெற்ற இன அழிப்புப் போரும், அதன் பின்னரான அரசியல் நிலவரமும், கலவரம் நிறைந்து தமிழ் மக்களை வாட்டி வதைத்து வருகிறது.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

அரசியல் போராட்டத்தைத் தொடர முடியாத அரசியல் தலைமைகளால், ஆயுதப் போராட்டத்தை தமிழ் வாலிபர் இடையே ஊக்குவித்தது. ஆனால், அதே அரசியல் தலைமையும் போட்டி ஆயுதக் குழுக்களும், ஆயுதப் போராட்டத்தையும், குழுக்களையும் அழிப்பதற்குத் துணை போயின. அதனால் பழம் பெருமைமிக்க தமிழ் இனம் வரலாறு காணாத அழிவுகளையும், அவலங்களையும் சந்திக்கும் நிலை வந்தது.

இவற்றில் இருந்து மீட்டுக் காப்பாற்றும் பாரிய பொறுப்பைக் காலம் உங்கள் தலைமீது ஒப்படைத்து, இன விடியலுக்காகக் காத்திருக்கிறது. வேறு யாருக்கும் கிட்டாத வரலாற்றுக் கடமை உங்களை அழைக்கிறது. அதனை அகரம் உரிமையுடன் கேட்டு நிற்கிறது.



AKM

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

தமிழனின் வரலாற்றில்
மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது









உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



வாடிக்கையாளர் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்...

AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்
சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

தேவன்



# நான் தெள்ளியவோர் முழுச்சவிக்கி

தமிழகத்தின் சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி என்ற கிராமம் தற்போது உலகப் பிரசித்தி பெற்ற இடமாக மாறியிருக்கிறது. தமிழரது தொன்மை 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ற நிலைமாறி, தற்போது அது கிறித்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்ற உண்மையை உலகிற்கு பறைசாற்றியிருக்கிறது கீழடி. தோண்டத் தோண்ட தமிழர்களின் தொன்மைப் புதையல் வெளிப்படும் இந்த நிலப்பகுதி உலகத் தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

அங்கே கிடைக்கும் மட்பாண்ட ஓடுகள், செங்கற்சுவர்கள், உறைகிணறுகள், கழிவுநீர்



வடிகால் ஆகியன தமிழரது நாகரிக வளர்ச்சியைப் பறைசாற்றி நிற்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக அங்கே கிடைக்கும் தொல்பொருட்களில் எங்கேயும் சாதியோ மதமோ பறைசாற்றப்படவில்லை என்பதே சிறப்பானது. ஆதித்தமிழர் அனைவரும் தமிழர் என்ற ஒத்த குடியாக ஒன்றுபட்டு வாழ்ந்திருக்கிறார்களே தவிர யாரும் எந்தப் பிரிவினைக்குள்ளும் மக்களை அடக்க முயலவில்லை. பானை ஓடுகளில் கிடைத்த எழுத்துகளில் ஆதன் என்ற பெயர் காணப்பட்டுள்ளது.

ஆதன் அவினி சங்ககால மன்னர்களில் ஒருவன். புலவர் ஓரம்போகியார் ஐங்குறுநூறு தொகுப்பில் உள்ள மருதத்திணை பாடல்களில் முதல் பத்திலுள்ள 10 பாடல்களையும் 'வாழி ஆதன் வாழி அவினி' என்று அரசவாழ்த்துப் பாடித் தொடங்குகிறார். இதில் ஆதன் என்பது தந்தையின் பெயர். அவினி என்பது மகன் பெயர்.




# LIMRA BAGS Pvt. Ltd.,



Chairman
**SADIK BASHA.M**

Online Shopping : www. limramart.com
No.14, Pensioner Street, Thennur,
Trichy - 620 017. Tamilnadu, India.
Touch with us : 0431 - 4346053,
Mob : +91 97861 14635.
domesticlimra@gmail.com
www.limrabags.in



எழினி, வழுதி, ஓரி, காரி, நள்ளி முதலான பெயர்கள் இகர விகுதி பெற்று முடிந்துள்ளதைக் காணமுடிகிறது. அவற்றைப் போல அவினி என்னும் பெயரும் இகர இறுதி பெற்ற ஆண்பால் பெயர்.

மூச்சுக் காற்றில் உள்ளிழுக்கும் காற்று, வெளிவிடும் காற்று என்று இரண்டு வகை உண்டு. உள்ளிழுக்கும் காற்றிலுள்ள உயிர்வளி (பிராண வாயு) உடலில் ஊறிய சத்தை எரிக்க உதவுகிறது. உதவும் காற்று நமக்கு ஆகும் காற்று. ஆகும் காற்று ஆதல் காற்று. ஆதல் காற்றை ஆதன் என்பது தமிழ். வெளிவிடும் காற்று அவிந்த காற்று. எரிந்தது அவிந்தால் கரி. அதனால் வெளிவிடும் காற்றைக் கரி+அமில வாயு என்பர். தமிழ் அவிந்த காற்றை அவினி என்று குறிப்பிடுகிறது. ஆதன், அவினி என்னும் பெயர்கள் இவ்வாறு தோன்றின. இவற்றை மக்களும் தமக்குப் பெயராக்கிக் கொண்டனர்.

உலோகத்தில் காதணி செய்யும் வழக்கம் அந்நாளில் தமிழர்களிடையே இருந்திருக்கிறது. தாதுவிலிருந்து உலோகத்தைப் பிரித்தெடுப்பதல்ல ; இந்நாளில் அந்த அறிவியல் முறையை படித்து மனப்பாடம் செய்வது பெருவலி. தாதுவை சலித்து உருக்கி பல்வேறு வினைகளைக் கடந்து தூய்மையான உலோகத்தைப் பெறுவது எளிதான காரியமல்ல. ஆனால் ஏதோ ஒரு வகையில் தாதுவிலிருந்து உலோகத்தைப் பிரித்து அணிகள் செய்திருக்கிறார்கள் தமிழர்கள்.

மேலுள்ள செய்திகளெல்லாம் மகிழ்ச்சியைத் தந்தாலும், இதையெல்லாம் இருட்டடிப்புச் செய்துவிடுவார்களோ என்ற அச்சமும் மேலோங்காமல் இல்லை. ஏனெனில் இந்திய மத்திய அரசு சொல்லும் வேத காலமும், வேதத்திற்குப் பிந்திய காலமும் தான் நாகரிகத்தின் தோற்றுவாய் என்பது கீழடித் தொல்பொருட்கள் சொல்லும் செய்தியில் அடிபட்டு போய்விடும் என்ற அச்சம் ஆரியர்களுக்கு உண்டு. கீழடியின் தொன்மையை இந்திய மத்திய அரசு இருட்டடிப்புச் செய்வதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் பலனளிக்காது போன நிலையில், அகழ்வாராய்ச்சிக்குரிய பணச்செலவை உரியமுறையில் வழங்காது இழுத்தடிப்புச் செய்யும் காரியத்தைச் செய்துவருகிறது.



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**






ENESAR N.S.R. என்எஸ்ஆர்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**

வாடிக்கையாளர் அனைவருக்கும்....





ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி

இதுபற்றி ஐயா மா.சோ. விக்டர் அவர்கள் "தமிழர் நிலத்தில் எங்கு அகழ்வாய்வு நடத்தி எது எடுத்தாலும் இந்தியா அதன் பழைமையை 2500 ஆண்டை தாண்டவிடாது, ஆனால் கீழடி நாகரீகத்தின் வயது கிமு 7-6 நூற்றாண்டை ஒட்டியது என எல்லா சான்றுகளும் இருக்கிறது" என்றார். அது முற்றிலும் உண்மை. சமீபத்தில் வெளிவந்த எழுத்து பெரிக்கப்பட்ட பானை ஓட்டின் வயது கிமு6ஆம் நூற்றாண்டு.


இதேபோல ஆதிச்சநல்லூர் குறித்த செய்திகள் கடந்த வாரம் வந்தபொழுது, தமிழர் நாகரீகத்தின் நிரூபிக்கப்பட்டக் காலம் கி.மு 1,000 வரையிலும் என பெருமிதப் பட்டுக் கொண்டவர்களை காணமுடிந்தது.

சமகாலத்திலேயே நாம் எத்தனை தகவல்களை மறந்து கடந்து இருக்கிறோம். தொல்லியல் துறையும் கடலாய்வுத் துறையும் இந்திய ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் விட்டுவைத்திருப்பதால், நம் வரலாற்றை நாம் காணக் கூட, தேடக் கூட, எல்லாவற்றுக்கும் இந்திய நடுவண் அரசிடன் கையேந்தும் நிலையிலேயே நமது காலம் கடந்துவிடுகிறது. இப்படித்தான், பூம்புகார் குறித்த செய்திகளும் கடந்த 20 ஆண்டுகளுக்குள் படிப்படியாக மறைக்கப்பட்டு நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டில் பெங்களூரில் இருக்கும் இந்திய கடலியல் ஆய்வு மையத்திற்கு வந்த கிரகாம் ம் கன் காக் *(Graham Han Cock)* என்னும் இங்கிலாந்தைச் சேர்ந்த கடலியல் ஆய்வாளர், இரண்டு விதமான கடலியல் ஆய்வில் ஆர்வம் கொண்டிருந்தார். ஒன்று, துவாரகா இன்னொன்று பூம்புகார். பூம்புகாரில் கடலாய்வு மேற்கொள்ள இந்திய நடுவண் அரசு சம்மதித்தாலும் நிதி ஒதுக்க ஒப்புக் கொள்ளவில்லை, ஆனால், துவாரகாவிற்கான நிதி வழங்கப்பட்டது. தன் சொந்த முயற்சியிலும்


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு




**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**



புதுப்பொலிவுடன் மீண்டும்....
Wedding Sarees DISCOUNT!!
ESTD 1992
மங்கையரின் மனங் கவரும்
2019 வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
Gopara Gnanam
Rheinische Str.62
44147 Dortmund
Mob.: 0171 330 65 42,
0176 246 54 009
வாடிக்கையாளர் அனைவருக்கும்....
தீபாவளி
நல்வாழ்த்துகள்





*Channel - 4* தொலைக்காட்சி நிறுவனத்தின் உதவியாலும் பூம்புகார் ஆய்வினை மேற்கொண்டார் கிரகாம் . பூம்புகாரின் இன்றைய கடல் எல்லையில் இருந்து 3 கிலோமீட்டர் ஆழத்தில் புதைந்த நகரத்தையும் வணிக, கப்பல் போக்குவரத்துத் தளம் இருந்ததற்கான அடையாளத்தையும் காட்சிப் படுத்தினார். அப்பகுதியை கடந்து இன்னும் இன்னும் நகரக் கட்டமைப்புகள் இருக்க வாய்ப்புண்டு எனினும் ஆழமான கடலுக்குள் சென்று ஆய்வு நடத்த கால அவகாசமும் நிதியும் தேவைப்பட்டதால் அவர் அங்கிருந்து பின் வாங்கினார்.

ஆனாலும், அதுவரை கண்டுப்பிடிக்கப்பட்ட ஆய்வுத் தரவுகளின் படியே அப்பகுதிக்கான வயது இன்றிலிருந்து 10,000-11,000 ஆண்டுகள் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டது. இதனை பல்கலைக்கழகப் பேராசிரியர் க்ளன் மில்னே **(Durham University, Glenn Milne)** கடலியல் ஆய்வுகளின் தரவுகள் அடிப்படையில் உறுதியும் படுத்தினார். கிரகாம் கான் காக் தன்னுடைய இணையத் தளத்திலும் இதுக்குறித்தத் தகவல்களை பகிர்ந்துள்ளார்.

என்ன வியப்பென்றால், அன்றைய பாசக அரசாங்கம் துவாரகாவின் வயது 10,000 ஆண்டுகள் இருக்கலாம் எனக் கூறியது, பூம்புகாரைப் பற்றி எங்குமே பேசியதாக தெரியவில்லை. செய்திகளும் வடநாட்டு ஆங்கில ஊடகங்கள் எதிலுமே வரவில்லை. தமிழகத்திலும் பிபிசி ஆங்கில இணையச் செய்திகளில் மட்டுமே தென்படுகின்றன.

இப்படித்தான் நம் கண் முன்னே







நம் வரலாறுகள் புதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை கி.மு.500-1000 வரை மட்டுமே இருக்கும் கால அளவுகளில் வரும் வரலாறுகளை மட்டுமே இப்பொழுது வெளிவரும்படியும் இந்திய நடுவண் அரசு கவனமாகப் பார்த்துக் கொள்கிறது. ஆதிச்சநல்லூரிலும் கிடைத்த அனைத்து வகையான புதைப் பொருட்களை இன்னும் முழுமையாக ஆய்வு செய்யவில்லை. அதேப் போன்றுதான் கீழடியிலும். இவ்வளவு ஏன், மதுரையை நாம் இன்னும் முழுமையாக ஆய்வுக்குட் படுத்தவேயில்லை.

அதேப்போலத்தான், சிந்து சமவெளிக்கும் தமிழர் நாகரீகத்திற்கும் தொடர்புண்டு என ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே இசுப்பெயின் நாட்டில் இருந்து வந்து பம்பாய் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய அருட்தந்தை கென்றி கீராசு அவர்களும் எடுத்துக் கூறி வந்தார். ***Studies on Proto Indo Medditeranean Culture*** என்னும் தன் நூலில் விரிவாக எழுதியுள்ளார். அந்த நூலின் பிரதி எங்குமே கிடைக்கத பொழுது, ***Melbourne University*** நூலகத்தில் இருப்பதாக அறிகிறேன்.

ஆனாலும் இந்திய நடுவண் அரசு வட இந்திய அடையாளமாகவே கருதி கூறி வந்தது. சிந்து சமவெளி நாகரிகத்தை வட இந்தியாவின் அடையாளம் என பெருமைப் பொங்க சொல்லிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது வரை சிந்து சமவெளி நாகரிகச் செய்தி அடிக்கடித் தென்பட்டதும், நிறைய ஆய்வுகள் அதற்கு நேர்மாறாய் வரத் தொடங்கியதும் அச்செய்திகள் அதோடு காணமால் போனதையும் நிகழ் காலத்திலேயே பார்க்கிறோம்.

இந்திய வரைப்படத்தில் தமிழ்நாடு இணைக்கப்பட்ட ஒரே காரணத்திற்காக எத்தனை எத்தனை வரலாற்று துரோகங்களை நாம் சுமப்பதோ தெரியவில்லை என்கிறார் தமிழறிஞர் ஒருவர். நாம் இணைந்தது, இப்புவிசார் மண்டலத்தின் கூட்டுப் பலத்திற்காக இருக்க வேண்டுமே தவிர, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்தவோ, ஒருவர் வரலாற்றை இன்னொருவர் அழிக்கவோ, ஒருவர் மொழியை, பண்பாட்டை இன்னொருவர் மீது திணிக்கவோ இருக்கக் கூடாது.

பகுதி.24





# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

- அவதானி

உளவு நிறுவனங்களின் பணிகளில் ஒன்று, பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவது போன்ற செயல். ஒரு நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை அமைதியற்றதாக விடுவதற்கு, அந்நாட்டின் அரச இயந்திரம் செயலற்ற தன்மை ஏற்படுவதற்குப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, அரசுக்கு எதிராக முன்னெடுக்கும் போராட்டமும் காரணமாகின்றது.

போராட்டங்களுக்குள் வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் ஊடுருவல் ஏற்பட வாய்ப்பில்லை என்ற பொதுக் கணிப்பினை மக்கள் கொண்டிருந்தாலும், மிகவும் உன்னிப்பாக கவனித்தால் அது தென்படும். ஒரு நாட்டு மக்களுடைய அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவை அவர்களுக்குக் கிடைக்கத் தவறினாலோ அல்லது தாமதமேற்பட்டாலோ மக்கள் அரசாங்கத்திற்கு எதிரான அதிருப்தியாளர்களாக மாறுவார்கள்.

மக்கள் அனைவரும் ஏதோ ஒருவிதத்தில் பல்வேறுபட்ட பணிக் களங்கள் ஊடாக அரசாங்கத்துடன் இணைந்தேயிருக்கின்றார்கள். மக்களின் தேவைகள் பலவாக இருக்கின்றன. குறிப்பாக விலையேற்றம் என்பது மக்களை உடனடியாகவே அவர்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும். உணவுப் பொருட்களிலிருந்து போக்குவரத்துக்கான அவர்களின் செலவினங்கள் அதிகரிக்கும் போது, மக்கள் அரசுக்கு எதிராகப் போராடுவார்கள்.

பொருட்களின் விலையேற்றத்துக்குப் பல காரணங்கள் இருந்த போதும், அக்காரணங்கள் எதையுமே போராட்டக் காரர்கள் கவனத்தில் கொள்ளாதவாறு உளவு நிறுவனங்களின் ஒற்றர்கள், போராட்டக் குழுக்களின் முக்கியத் தலைவர்களின் மூளைகளைச் சலவை செய்து வைத்திருப்பார்கள்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, போராட்ட அமைப்புகளின் முக்கிய பதவிகளில் இருப்பவர்களின் பலம், பலவீனத்தை அறிந்து வைத்துக் கொண்டு, மிகவும் நுட்பமாக தமது எண்ணங்களை நிறைவேற்றி விடுவார்கள்.

அரசுக்கு எதிரான அதிருப்தியை ஊதிப் பெரிதாக்குவதுதான் அவர்களின் முதல் வேலையாகும். ஒரு நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பும், அது சார்ந்து

நிற்கின்ற சமூக ஒருங்கிணைப்பும்தான் மக்களுக்கு அமைதியான வாழ்க்கையை மக்களுக்குக் கொடுக்கும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அரசே பொறுப்பாகும். ஒரு சரியான அரசு இயந்திரத்தில், ஒவ்வொரு தனிமனிதனும் தொடர்ச்சியான அரசின் பார்வைக்குட்பட்டவனாகவே இருப்பான். ஒவ்வொரு தனிமனிதனும் தனது அன்றாட வாழ்க்கை எவ்வித தொந்தரவும் இல்லாமலும், சலிப்பற்ற நிலையிலும் இருக்க வேண்டுமேன்றே விரும்புவான்.

குடும்பம் என்ற கணவன், மனைவி, பிள்ளைகள் என்ற குழுத்தன்மைக்குள் ஏற்படும் அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான சூழ்நிலையையும், வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கிருக்கின்றது.

தனிமனிதன் என்ற ஒரு அலகின் தேவை என்ன? என்பதை உணர்ந்த அரசுகள், மாற்றம் பெற்று வரும் பொருளாதாரச் சூழ்நிலைகள் அத்தனைக்கும் ஈடுகொடுக்கும் அதே வேளை, தனிமனிதனின் அன்றாட வாழ்க்கை அதனால் பாதித்துவிடாதபடி செலவினங்களுக்கு ஏற்ப, அவனுக்கான பொருளாதார வழிமுறைகளைச் சமாந்தரமாக பெற்றுக் கொள்ள வழி வகுக்கின்றது.

பொருளாதாரக் கட்டமைப்பே நாட்டுக்கான நிதிக் காத்திரத்தை வலுப்படுத்தவும், தொடர்ச்சியாக தக்க வைப்பதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு நாட்டினுடைய சிறப்பான பொருளாதாரக் கட்டமைப்பே ஒரு தனிமனிதனை மகிழ்ச்சியடைய வைக்கின்றது. அந்த மகிழ்;சியை அவன் இழக்கும் போது, அரசுக்கு எதிராக செயல்படத் தொடங்குவான்.




சிறப்பான பொருளாதாரக் கட்டமைப்பு உள்ள நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அந்நாட்டினது குடிமகன் உணர்ந்த போதும், அந்த உணர்தலை திசை திருப்பி, அரசுக்கெதிராக போராட வைப்பதே உளவு நிறுவனங்களின் வேலையாகும்.

இந்த நிலையில்தான் போராட்ட அமைப்புகளில் முக்கிய பதவிகளில் இருப்பவர்களின் பலம், பலவீனம் என்பவற்றுடன், அவர்களின் பொருளாதார நிலையையும், அவர்களுடன் பழகியவாறே அறிந்து கொள்வார்கள்.

உளவு நிறுவனங்களின் சுதேச முகவர்களாகச் செயல்படுபவர்கள் போராட்ட அமைப்புகளின் முக்கிய செயல்பாட்டாளர்களுடன் மிகவும் தந்திரமான முறையில் உரையாடி, அவர்களை மெல்ல மெல்ல தாம் விரித்து வைத்திருக்கின்ற வலைக்குள் விழுத்தி விடுவார்கள்.

விழுந்தவர்களை எழுந்து விடாதவாறு காட்டிக் கொடுப்பதன் மூலம், அவர்களுக்கு ஏற்படும் கெட்ட பெயரையும், உறுப்பினர்கள் கொள்ளப் போகும் கோபாவேசத்தையும் ஒரு எச்சரிக்கையாகச் சொல்லி வைப்பார்கள்.

ஒரு நாடு தனக்காக போராடிக் கொண்டிருக்கும் பொருளாதார நிலைகளை அவன் உணர்ந்தும், போராடுவது தனது நாட்டின் பொருளாதார நிலைகளை அது அழித்து விடும் என்று தெரிந்த போதும், உளவு நிறுவனங்களின் ஒற்றர்களினால் தவறானதை தர்க்க ரீதியாக நியாயப் படுத்தியதை, உண்மை என நம்பி, புதைகுழியில் கால் வைத்தவன் நிலை போல, மூளைச் சலவை செய்யப்பட்ட நிலையிலும், அவனுடைய பலம், பலவீனத்திற்கமைய அவனது தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையிலும், அவன் அல்லது அவர்கள் அரசுக்கெதிரான நாம் மேற்கொண்ட போராட்டம் சரியானதே! என்பதை, ஒற்றர்கள் எப்படிச் சொல்லிக் கொடுத்தார்களோ... அவ்வாறே தமது உறுப்பினர்களை நம்ப வைக்கும் விதத்தில் பிரச்சாரம் செய்வார்கள். தொடர்ச்சியான பிரச்சாரம் மூளைச் சலவையாக மாறும்.

ஒற்றர்களாக செயல்படுபவர்கள் அதற்கான கல்வியைக் கற்றவர்களாகவும், இராஜதந்திரிகளாகவும் இருப்பார்கள். ஒரு நாட்டில் இருக்கும் தூதரகம் அந்நாட்டினுடைய அன்றாட செயல்பாடுகளைக் மிகவும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பார்கள். அத்தூதரகத்தில் அதற்கென தனிப்பிரிவே இயங்கும்.

(தொடரும்)




GGS
FOOD SERVICE

CONTACT
R.P. PARAMESH

02305 93 73 75
017 93 91 607

Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்


**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch


Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















## அவனா? இவன்!

# 1958 இனக் கலவரம்



அவன், அரச பணி நிமித்தமாக 1957ல் தலைநகர் கொழும்பை தனது தற்காலிக வாழ்விடமாகக் கொண்டிருக்கும் நிலை உருவானது. கிராமத்தவனாக கொழும்பு நகரில் வாழ்வைத் தொடங்கியவனுக்கு, கிராமத்தில் காரைக் கண்ணால் காண்பதே அதிசயக் காட்சியாகப் பார்த்துப் பழகிப்போன அவனுக்கு, நிமிடத்துக்கு 4 கார்கள் காற்றின் வேகத்தில் கடக்கும் வீதிகளைக் கடப்பதே அவனுக்குள் ஒரு மரண பயமாக, பெரும் புயலாய் வீசி அலைய வைத்துவிடும். ஆனால், படிப்படியாக அவன் பயங்கள் ஒழிந்து, அசட்டுத் துணிச்சல் அவனைப் பற்றிவிட்டக் காலத்தை அவனது புதிய வாழ்வு கொடுத்தது.

அப்படியான ஒரு அனுபவத்தை 11 தொழிலாளர் சங்கங்கள் இணைந்த, அரச பொது தொழிலாளர்களின் சம்மேளனம் நடத்திய வேலை நிறுத்தப் போராட்ட ஊர்வலத்தில், முதல் வரிசையில் செங்கொடி பிடித்து நடந்தவனை, வேலை பறிபோகும் ஆபத்தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.



அப்பொழுது அவனது உத்தியோகம், தகுதி காண் காலம் என்கிற வேலை நீக்க முடியும் என்கிற மிரட்டலையும் மீறிவிட்டான் எனப் பலர் அவனையும், அவனது வயதான பெற்றோரையும் மிரட்டியும், அவன் மிரளவில்லை.

அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்களில் அரச பொது இலிகிதர் (கிளாக்கர்கள்) சேவைச் சங்கச் செயலராக செல்லையா என்கிற தமிழரும் ஒருவர். அவர் ரஷிய சார்பு கம்மியூனிச கட்சி ஆதரவாளர். அந்த வேலை நிறுத்தத்தை 20 நாட்களைக் கடந்தும் நின்றுவிடும் அறிகுறியே தென்படவில்லை. பண்டார நாயக்கா தலைமையிலான அரசு, பல வழிகளில் முயன்றும் அதனை நிறுத்த முடியவில்லை. கொழும்புத் துறைமுகத்தில் கூலிகளாக வேலைக்கு அமர்த்தப்பட்ட சிங்களக் காடையர்களை பயன்படுத்தி, வேலை நிறுத்தம் செய்த அரச ஊழியர்களைத் தாக்குதலும் நடத்திப் பார்த்தாயிற்று. இருந்தும் வேலை நிறுத்தம் தொடர்ந்தது.




இலங்கையில் இடம் பெற்ற பொழுதும், அவை எவையும் தொழிலாளரின் கோரிக்கைகளைப் பெறவில்லை என்பதும், அவை அரசியல் கட்சிகளின் அப்பட்டமான பலப் பரீட்சைகளாகவே இருந்தன என்பதே உண்மையாகும்.

ஆனால், 1958ல் இலங்கையில் இடம் பெற்ற வேலை நிறுத்தம் ஒரு தமிழரின் தலைமையிலும், அதிகளவில் தமிழர்களும் பங்கு பற்றிய காரணத்தாலும், இன வெறியனான பிரதமர் பண்டார நாயக்காவின் அரசு, தமிழருக்கு எதிரான இனவெறி அரசியலைத் தூண்டும் வகையில் செல்லையாக்களும், பள்ளையாக்களும் என்ற சொற்றொடரை பகிரங்கமாகப் பேசி, வேலை நிறுத்தம் முடிவுற்ற ஒரு சில வாரங்களில் அதாவது, மே22ந் திகதி தொடங்கி, நாடெங்கும் தமிழருக்கு எதிரான இனவழிப்பு சுதந்திரம் பெற்ற 10வது வருடத்தில் பண்டார நாயக்காவின் தூண்டுதலால் அரங்கேற்றம் கண்டது.

பண்டாரநாயக்க முடிவில் ரஷிய தூதரை அணுகி, அவர் மூலமாக ரஷிய சார்புக் கம்மியூனிஸ்ட் கட்சி, வேலை நிறுத்தத்தை நிறுத்த வற்புறுத்தியது. திடீரென ஒருநாள் வேலை நிறுத்தம் செய்த நண்பர்கள் முன், கொழும்புக் கோட்டை கோடன் பூங்காவில் வேலை நிறுத்தம் செய்த உறுப்பினர் முன் தோன்றிய செயலாளர் செல்லையா, 'வேலை நிறுத்தம் கைவிடப்படுகிறது, அதற்கு அடையாளமாக எதிரே உள்ள செனேட் சபை கட்டிடத்தில் பிரதமர் பண்டார நாயக்காவுடன் பேச்சு வார்த்தைகள் தொடங்கியதன் அடையாளமாக, அங்கிருந்த மேல்மாடி யன்னல் வழியாக கையசைப்பேன். அத்துடன் நீங்கள் வேலைக்குத் திரும்புங்கள்" என அறிவித்து விட்டு, உறுப்பினரின் ஆட்சேபக் கூச்சலை கவனத்தில் எடுக்காமல் மறைந்து விட்டார். அக்காலத்தில் அதுவே மிகப்பெரும் தொழிற்சங்க காட்டிக் கொடுப்பாக பேசப்பட்டது.

இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் அதுவே மிகப்பெரும் கடைசி தொழிற்சங்க நடவடிக்கையாக இருந்தது. அதற்குப் பின்னர் பல வேலை நிறுத்தங்கள்

பண்டாவைத் தொடர்ந்து, அவரது



மனைவி ஸ்ரீமாவோ மகள் சந்திரிகா என இடையில் ஜே.ஆர்., பிரேமதாசா மகிந்தர் மைத்திரி என வரிசையாக வந்த அனைவரும் அழித்தும் கூட, தமிழின அழிப்பு இன்னமும் முடிவுறாமல் தொடர்ந்து கொண்டே போகிறது.

தமிழன் மட்டும் இன்னமும் மாறாமல் காட்டிக் கொடுத்தும், கழுத்தை அறுத்தும் அழிந்து கொண்டே போகிறான். தரணியே மாறினாலும் மாறுமே ஒழிய, தமிழன் மட்டும் மாறவே மாட்டான்.

**[அவன் வருவான்]**



# ஒரு கொள்ளையினதும் மூடிய கிணறுகளினதும் சந்தேகங்கள்





இலங்கையில் நடைபெற்று முடிந்த தமிழின ஆயுத உரிமைப் போர் தமிழனினத்திற்கும் அரசாங்கத்திற்குமான போராகவே, அதனை சீரணிக்க முடியா விட்டாலும், அதனை இலங்கை அரசும், உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். போர்க்காலம் என்பது, பெருமளவிலான தமிழர்களின் வாழ்விடங்கள் பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள், அரச ஆளுமைக்குள் சூனிப் பிரதேசமாக இருந்த காலம்.

தமிழர்களுக்கு அது சூனியப் பிரதேசமாகவும், பொதுமக்கள் யாருமே அங்கு நடமாட முடியாத இருண்டப் பிரதேசமாக இருந்ததே யொழிய இராணுவத்தினரும், இராணுவத்தினருக்கான சிங்கள மக்களும் நடமாடித் திரிந்த பிரதேசமாகவே அது இருந்தது. மக்கள் தமது வீடுகளை, வீட்டினதும் காணிகளினதும் எல்லைகளை, தோட்டங்களை, வயல்களை, கிணறுகளை, மரம் செடி கொடிகளை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்தனர்.

இப்படியெல்லாவற்றையும் விட்டுப் பிரிந்தவர்களின் காணிகளின் பெரும் பகுதிகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் பாதுகாப்பு வலையம் என்று பெயரில் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருந்தன. பாதுகாப்பு வலையம் என்ற பெயரில் இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிவற்றின் பணிமனைகளும் இராணுவ, கடற்படை, விமானப்படை வீரர்களின் குடியிருப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன. உற்று நோக்கினால் யாழ் குடாநாட்டைச் சுற்றி இவை ஆங்காங்கே இருக்கின்றன.

பல ஆண்டுகளாக வலிகாமத்தின் வடக்கு நிலப்பரப்புகள் இராணுவ பாதுகாப்பு வலையமாக அவர்களின் கட்டுப்பாடுகளின் பொதுமக்கள் அங்கு பிரவேசிக்க தடை விதிக்கப்பட்ட பிரேதேசமாகவே இருந்திருக்கின்றன.



## ஏலையா க.முருகதாசன்

மக்கள் குடியிருந்து விட்டுச் சென்ற வீடுகள் எத்தனை ஆண்டுகள் சென்றால் வீட்டுக் கூரைகளில் தொடங்கி, கூரைகளைத் தாங்கி நிற்கும் மரங்கள் வளை, கதவுகள், யன்னல்கள் ஆகியவை பராமரிப்பற்ற நிலையில் சிதிலமடைந்து சிலந்தி வலைகளின் இருப்பிடமாக மாறுவது மட்டுமல்ல, சிதிலமடைந்து உக்கி கூரைகள் காற்றினாலும், மழையினாலும் உடைந்து கொட்டுண்டு போய்க் கிடப்பதும், மழையின் நேரடித் தாக்கினால் கதவுகள், யன்னல்கள் சுவரை விட்டு விலகுவதும், கதவுகளில் இறுக்கி சுவரோடு வைத்து கட்டப்பட்டிருக்கும் கம்பிகள் கறல் பிடிப்பதனால் சீமெந்து பூச்சு உடைந்து, கறல் பிடித்த இரும்புக் கம்பிகள் வெளியே தெரிவது உண்டு.

வீட்டு அறைகள் சுத்தப்படுத்தி, பராமரிப்பு அற்று இருப்பதனால் தூசிகள் நிறைந்தும், தரை வெடிப்புகள் ஏற்பட்டும், காற்றினாலும், பறவைகளினாலும் புற்களின் விதைகள், மரம், செடி, கொடி போன்றவற்றின் விதைகள் வீட்டுத் தரைகளின் மேலும் முற்றத்திலும் வீட்டைச் சுற்றிப் பரவுவதானால் வீட்டுக்குள்ளும், வெளியிலும் புற்களோ, மரஞ்செடி கொடிகளோ முளைப்பதற்கு வாய்ப்புண்டு.

இந்த மாற்றத்தினால் ஒரு வீடு பாழடைந்த வீடாக மாறும்பட்சத்தில் கூட கூரைகள், கதவுகள், யன்னல்கள், சுவர்கள் சிதிலமடைந்து உருமாறுமே தவிர, அவை கொள்ளையடிக்கப்படா விட்டால் காணாமல் போவதற்கு எவ்வித வாய்ப்புமே இருக்காது. ஆனால், பகாதுகாப்பு வலையத்துக்குள் இருந்த பெரும்பாலான வீடுகள், அங்கே வீடுகள் இருந்ததற்கான தடயமே இல்லாது வெறும் சீமெந்துத் தரை மட்டுமே இருக்கின்றன.

இன்னும் பல வீடுகளின் சுவர்கள் மட்டுமே இருக்கின்றனவே தவிர, கூரைகளின் ஓடுகள், கதவுகள், யன்னல்கள் எதுவுமே இல்லை.கதவுகள், யன்னல்கள் பெயர்த்தெடுத்த எச்சங்கள் அப்பட்டமாகவே அங்கு தெரிகின்றன.

அப்படியானால் ஓடுகள், வளைகள், மரங்கள், யன்னல்கள், கதவுகள், கொங்கிறீட்



கற்கள் என்பன எங்கே?. கொள்ளையடிக்கப் பட்டு விட்டன என்று எவ்வித சந்தேகமின்றி தெளிவாகவே தெரிகின்றன. மக்கள் பிரவேசிக்க அனுமதியற்ற பாதுகாப்பு வளைய நிலப்பரப்பினில் சுற்றித் திரிந்தவர்கள் இராணுவமே. எனவே கொள்ளையடித்தவர்கள் அவர்கள் எனவோ அல்லது அப்பகுதிகளுக்கு வந்து போவதற்கு அனுமதியுள்ள பெருபான்மை இனத்தைச் சேர்ந்த வியாபாரிகளா?. தமிழர்கள் விடுக்கும் கேள்விகளுக்கு முப்படைகளுக்கும் பொறுப்பாக இருக்கும் அரசே பதில் சொல்ல வேண்டும்.



இது ஒருபுறமிருக்க, ஒரு கிணறு பல ஆண்டுகள் பராமரிக்கப்படாவிட்டால் பாசிகள் படர்ந்து செடிகளும், கொடிகளும் கிணற்றின் உட்சுவர்களில் முளைத்திருப்பது சாத்தியமே. கொடிகள், செடிகள் வளர்ந்து கிணற்றின் உட்பகுதியை மூடியிருப்பதும் சாத்தியமே. ஆனால், வீட்டுக் கிணறுகளில் பெரும்பாலானவையும் காணிகள் பலவற்றினதும் கிணறுகள் முற்றுமுழுதாக மூடப்பட்டிருக்கின்றன.

இயற்கையாக தூசிப் படங்களினாலோ மற்றும் கஞ்சல் குப்பைகளினாலோ அல்லது கற்களினாலோ முற்று முழுதாக மூடப்படுவதற்கான சாத்தியம் எதுவுமே இல்லை.ஏனெனில் சிதிலமடைந்த கிணற்றுச் சுவர்கள் இடிந்து, கிணற்றுக்குள் விழுந்திருப்பினும் கூட கிணறு இருந்த அடிச்சுவடே தெரியாமலிருப்பாதற்கான வாய்ப்புக்கள் எதுவுமேயில்லை.

அப்படியானால் ஏன் மூடப்பட்டது? யாரால் மூடப்பட்டது? என்ற கேள்வி எழுவது இயற்கையே. போர்க்காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்கள் உயிருடன் இருக்கிறார்களா? அல்லது மூடப்பட்ட கிணறுகளுக்குள் அடக்கம் செய்யப்பட்டு விட்டார்களா..? என்று பாதிக்கப்பட்ட ஒரு இனம் அரசை நோக்கி கேள்வி எழுப்புகிறது. செம்மணி போல தமிழர் நிலங்கள் அனைத்தும் எலும்புக் கூடுகளால் நிறைந்திருக்கின்றனவா?.

விடுவிக்கப்பட்ட தமது காணிகளில் மீண்டும் வீடுகள் கட்டி இருப்பவர்கள் மூடப்பட்ட கிணறுகளுக்குள்; விடை தெரியாத மர்மத்துடனும் சந்தேகத்துடனுந்தான் வசிக்கிறார்கள் என்பதுதான் உண்மை. எனவே, தமிழர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தமைக்கும், கிணறுகள் ஏன் மூடப்பட்டன? என்பதற்கும் அரசே பதில்கூற வேண்டும்

மூடிய கிணறுகளை தோண்டிப் பார்க்க வேண்டும் என்று தமிழர்கள் கோரிக்கை விடுவார்களானல், அதைச் செய்ய அரசு தயாரா?. தமிழர்களின் சந்தேகங்களுக்குச் சரியான பதில் அரசு தர வேண்டும்.



# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்கு யாருக்கு?



# மூவரில் யாரோ?

நல்லாட்சி தர வந்த நாயகன் இவரே! என எங்களைப் பயங்கரவாதிகள் எனப் போரிட்டு, தமிழ் இன அழிப்பை நடத்திய இந்திய, அமெரிக்க ஐரோப்பிய கனவான்கள் வருந்தி, உழைத்து உருவாக்கிய அவதாரமான மைத்திரிபால சிறிசேன இன்று வெறுங்கை வீசிவந்து வாக்கைப் போடுங்கோ, வந்து எல்லாம் தருகிறேன் என்கிறார்.

சம்பந்தன், சுமந்திரன், மாவை, கொம்பனி எதை விழுங்கிறது எதை துப்புவது எனத் தெரியாமல் திண்டாடுகிறார்கள். டக்டர் சிவமோகன் என்ன சொல்லி, எப்படித் தப்பலாம்? எனத் தனது நாடியைத் தானே பிடிச்சுப் பார்க்கிறார். தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணிலை விட்டால் வேறு வழி இல்லை என கையைப் பிசைகிறது.

ரணிலோ என்னை நம்புங்கள், நான் வந்து போதிய பெரும் பான்மையும் கிடைத்தால் உங்களுக்கு எல்லாம் தருவேன் என்கிறார். சாதாரணமான தேர்தலையே வெல்ல முடியாமல் தவிக்கும் அவரின் நிலை, தானாக ஓடித் தப்ப முடியாத மூஞ்சூறு விளக்கு மாத்தையும் கொண்டு போக ஆசைப்படுவது போல உள்ளது.

சென்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் 1000 புத்த விகாரைகளைக்

கட்டுவேன் என்றவர் தமிழனின் கோடி வாடிகளில் எல்லாம் புத்த கோயில்களைக் கட்டிச் சாதனை படைக்கும் இவரா தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளைத் தீர்க்க முன்வருவார்?



இந்த அடிப்படை அறிவான கேள்விக்குக் கூட விடைதேட நினைக்காத முட்டாள் தலைமைகளை நம்பும் தமிழ் இனம் எப்படித்தான் தன்னைக் காப்பாற்றப் போகிறதோ? அந்தக் கடவுளால் கூட ஆகாத காரியம்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருந்தும் என நினைப்பதும்.

ரணில் தாமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தலையால் கிணறு கிண்டியும், அவரை நம்பும் நிலையில் அவரது கட்சியில் கூட யாருமே இல்லாத நிலையில் கடைசியாக சஜித் பிரேமதாசாவின் கட்டாயத்தால் ரணிலே விட்டுக் கொடுத்து, சஜித்தை ஆதரிக்கும் நிலைக்கு இறங்கி விட்டார். சஜித் வெற்றி பெறும் வாய்ப்பும் இல்லை. வென்றாலும் ரணில் பிரதமராகும் சாத்தியமும் மிகவும் குறைவாக உள்ளது. அப்படிப் பட்ட ரணிலை கூட்டமைப்பு தமிழ் மக்களை வாக்களிக்கக் கேட்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது?.

சஜித் இப்பொழுது தமிழ்







மக்களிடம் ஓடி ஓடி ஆதரவு கேட்கிறார். கூட்டமைப்பும் சஜித் புதியவர், நல்லவர், அப்பழுக்கற்றவர் எனத் தமிழ் மக்களை வாக்களிக்கக் கேட்டு, பால பாடம் நடத்தலாம். அதுதானே அவர்களது பாரம்பரியம்!

அமெரிக்காவின் ஆதரவும், ரணிலின் மறைமுக ஆதரவும், புத்த பீடாதி பதிகளின் பின் பலமும் பெற்ற ஒருவராக கோட்ட பாயா வெற்றிக் கனியைப் பறிப்பார் என்ற பலத்த எதிர்பார்ப்புகளை அவதானிக்க முடிகிறது. ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டதைப் போல தமிழ் முஸ்லிம் வாக்குகளால் கோட்டாவைத் தோற்கடிக்க முடியுமா? என்ற கேள்வி பலமாக உள்ளது. இதற்கான பதிலைத் தேர்தல் முடிவுகள்தான் தர முடியும்.



இதிலே மக்கள் சக்தி என்ற கூட்டணி சார்பில் இடது சாரிகளும் பெரும்பான்மையான அடித்தட்டு மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பவராக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் அனுரகுமார போட்டியிடுகிறார். கோட்டா, சஜித், அனுரா என்ற மூவரில் யார்? என்ற கேள்விதான் பரவலாக பேசப்படுகிறது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரை எவர் வந்தாலும் கதை ஒன்றேதான். யாருக்கும் வாக்களிக்காமல் விட்டால் குறைந்த பட்சம் பொல்லைக் கொடுத்து அடி வாங்குறோமே என்று ஆதங்கப்படும் நிலையை தவிர்த்து விடலாம்.



## தமிழகம் கீழடி ஆய்வுகள் சொல்லும் சேதிகள் என்ன ?



# தமிழீழம் கந்தரோடையின் நீட்சியா?

**தமிழரின் வரலாற்றை மாற்றி எழுத வைக்கின்றன தமிழகம் கீழடி அகழாய்வு முடிவுகள்.**

தமிழகம் கீழடியில் நடத்தப்பட்டு வரும் அகழாய்வுகள் பல ஆச்சரியமான வரலாற்றுச் சின்னங்களை வெளிப்படுத்தி வருகின்றன. அவற்றை ஆளும் ஆரிய மேலாதிக்க, இந்துத்துவ, தீவிரவாத பாரதீய ஜனதா கட்சி ஆட்சியாளரை ஆட்டம் காண வைத்துள்ளன. அதனால் முன்னர் நடத்தப்பட்ட ஆதிச்ச நல்லூர் ஆய்வுகளைப் போல வெறும் முதுமக்கள் தாழிகள் காணப்பட்டது போல் அல்லாமல், கீழடி ஆய்வுகள் பெருநகர மக்கள் குடியிருப்புகள், தொழிற்பட்டறைகள் போன்ற நாகரீக வளர்ச்சி அடைந்த மாநகரமாக



காணப்படுவதும், சிந்துவெளி நாகரிகத்தோடு தொடர்பு கொண்டதாகவும் காணப்படுவதால் அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்து நிற்கிறது.

மேலும், சிந்துவெளி நாகரிகத்தை விடவும் பழமையானதாக உள்ளதால், தமிழர்களை ஆனந்த வெள்ளத்தில் மிதக்க வைத்தும், மாற்று இனத்தவரை எரிச்சலுற வைத்தும், கீழடி அரசின் எதிர்ப்புகளை முறியடித்து நிற்கவேண்டி இருப்பதால், தமிழப் பொது மக்களின் பலத்த ஆதரவுத் தளத்தில் கீழடி அரசின் எதிர்ப்புகளை முறியடித்து வெற்றி பெற்று நிற்கிறது.

சிந்து வெளி நாகரிகம் தமிழரது அல்ல, அது ஆரியரது எனப் போராடி வந்த மத்திய அரசும், ஆரிய சக்திகளும் ஆய்வுகளின் முடிவுகளால் அவற்றை திராவிடரது எனப் பேசி, மழுப்பியவர்கள் எல்லாம் கீழடி ஆய்வுகள் சிந்துவெளியை பல வகையிலும் ஒத்துக் காணப்படுவதால்



சிந்துவெளியும், பழந்தமிழரது நாகரிகமே என ஏற்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

மேலும் கீழடியில் கிடைக்கப் பெற்ற சித்திர எழுத்து மாதிரிகள் கி.மு.580க்கு முற்பட்டவையாக காலபகுப்பு உறுதிப்படுத்தி விட்டதால் சிந்து வெளி எழுத்துக்கள், தமிழ் பிராமி எழுத்துகள் என்கிறார் தமிழ் நாடு அகழாய்வுத்துறை ஆணையர் திரு.ரி. உதயச்சந்திரன்.



அகழாய்வுத் துறை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையின்படி இந்தியாவில் கிடைத்த சித்திர எழுத்துக்களில் மிகப் பழமையானவை 4,500 வருடங்கள் பழமையான சிந்துவெளி எழுத்துகள் எனவும், கீழடியில் கிடைத்த கிறுக்கல் வெறும் கீறலாகக் கொள்ள முடியாது, அவை சிந்துவெளி எழுத்துகள். மறைந்த பிராமி எழுத்துக்களின் தொடக்கத்துக்கு முந்தைய இடைப்பட்ட காலத்து முன்னோடி எழுத்துகளாக கொள்ள வேண்டும் என கிறுக்கல் எழுத்து நிபுணர்கள் கருதுகிறார்கள்.

இந்தக் கீறல்கள் இந்துவெளி எழுத்துகளின் மறைவுக்குப் பின்னர் மாற்றம் பெற்ற அல்லது பிராமி எழுத்துக்கள் உருவாக உதவிய இடைக்கால சித்திர எழுத்துகள் ஆக இருக்க முடியும் என்பதால், அவற்றைப் புறந்தள்ளிவிட முடியாது. சிந்து வெளி எழுத்துகளைப் போன்றே இதுவரை இந்த எழுத்துகளை படித்தறியப் படாமல் இருந்தது. இப்படி அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

இவற்றின் படி தமிழ் மொழியும், தமிழரும் தென் கடலில் இருந்து மறைந்த குமரிக் கண்டத்தில் இருந்த தமிழ் மக்களும், தமிழ் மொழியும் தென்னிலங்கையில் இருந்து வடக்கே இந்தியப் பெரு நிலப்பரப்பு வடவேங்கடம் முதல் இமயம் வரை புதிதாகத் தோன்றியதால், தமிழ் மக்கள் கபாடம் முதல் கங்கைவரை பரவினர் என்பதை கீழடிக்கும், வடக்கே சிந்து வெளிக்கும் உள்ள தொடர்பு உறுதிப் படுத்துவதாகக் கொள்ள முடியும்.

அவ்வாறாயின் ஈழத்தில் வழுக்கை ஆற்றில் கிடைத்த பிராமி எழுத்துகளும், சுன்னாகம் கந்தரோடை அம்பாந் தோட்டைப் பகுதிகளில் கிடைத்த மட்பாண்ட ஓட்டு எழுத்துகளும், தமிழ் மொழியும், தமிழ் மக்களும் கீழடி சிந்துவெளி மக்களும், ஈழத்தில் இருந்து கடற்கோள்களால் இடம் பெயர்ந்த மக்களே என்பது நிரூபணம் ஆகிறது அல்லவா?




CENTURY
TRAVELS GMBH

உங்கள் பயணங்களை இலகுவாக்க
எம்மை நாடுங்கள்!

**direct booking number**
**Mobile : 0176 21682149**

## früh buchen ist günstiger


**53kg free**

ஆசியாவின் அனைத்து
பாகங்களிலும் தங்குமிட வசதிகள்
செய்து கொடுக்கப்படும்

பல புதிய பரிணாமங்களோடு
விசேட விலைக் கழிவுடன்

Rheinische Str. 29
44137 Dortmund
Germay

Tel.: 0231 55 74 319
0231 58 96 557
Fax : 0231 58 44 665
Mob. : 0176 21682149



email : info@centurytravels.com
web : www.centurytravels.com

**Gulf air** **599€**
31 Dezember
கையிருப்பு உள்ளவரை, குறிப்பிட்ட நாட்களில் மட்டும்

**KLM & ETIHARD** **499€**
குறிப்பிட்ட நாட்களில் மட்டும்

இலங்கைக் கடவுச்
சீட்டைப் புதுப்பித்துத் தரவும்
மற்றும் இந்தியாவுக்கான
விசா பெற்றுத் தரவும்
உதவுவோம்

# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15 YEARS ANNIVERSARY

மேலதீக விபரங்களுக்கு...

**www.etr.fm**

வாசகர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்